# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. II Issue 6 September 2012**

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்


**லைப் டிவைன்** .......... 2

**இம்மாதச் செய்தி** .......... 24

**சாவித்ரி** .......... 25

**யோக வாழ்க்கை விளக்கம் VI** .......... 27

**லைப் டிவைன் - கருத்து** .......... 32

**அஜெண்டா** .......... 34

**பூரணயோகம் - முதல் வாயில்கள்** .......... 37

**அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்** .......... 40

**பத்துக் கடை பாலு** .......... 47

**ஸ்ரீ அரவிந்தரும் மரபும்** .......... 56

**Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 1 & 2)** .......... 59


❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**
**தனிப் பிரதி ரூ.5/-**

## ஜீவியத்தின் ஓசை

**தீவிரம் சாதிக்கும். அது தவறினால் நல்லெண்ணம் நொடியில் அதை சாதிக்கும்.**

**மனித முயற்சி ஏற்றி வைக்கும் விளக்கு. தெய்வச் செயல் சூரியோதயம்.**

**இல்லாததைத் தேடுவது இயற்கை. நாம் கேட்பது கிடைக்கும்வரை நமக்குத் தேவையானதைக் கேட்கத் தோன்றாது.**

**ஆயுள் நீடித்தால் ஸ்ரீ அரவிந்தம் பலித்துள்ளது எனப் பொருள்.**

**கையால் நேரடியாக வேலை செய்வதின் முழுப்பலன் முழு சமர்ப்பணத்திற்கு உண்டு.**

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXIII. The Double Soul In Man

There is a true secret soul in us. *Page 225*
It is this veiled psychic entity. *Para 10*
We have said subliminal.
But the word is misleading.
Its presence is not the threshold of waking mind.
It rather burns in the temple.
It is the temple of the inmost heart.
It is behind the thick screen.
It is of the mind, life and body.
Not subliminal, but behind the veil.
It is the flame of the Godhead.
It is always alight in us.
It is inextinguishable.
Even by the dense unconsciousness.
It is of the spiritual self.
It obscures our outer nature.



## 23. மனிதனுள் இரட்டை ஆத்மா

நம்முள் உண்மையான இரகஸ்ய ஆத்மாவுண்டு.
அது திரைமறைவிலுள்ள சைத்திய புருஷன்.
நாம் அடி மனம் என்கிறோம்.
சொல்லைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம்.
அது விழிப்பான மனவாயிலில்லை.
அது கோவிலில் எரியும் விளக்கு.
இதயத்தின் பின்னாலுள்ள கோவில் அது.
தடித்த திரையின் பின் உள்ளது.
இவை மனம் வாழ்வு உடலாலானது.
அடி மனமில்லை, திரையின் பின் உள்ளது.
அது இறைவனின் அக்னி.
எந்நேரமும் எரியும் தழல் அது.
அதை அணைக்க முடியாது.
கனத்த இருளாலும் முடியாது.
ஆன்மா பிரம்மமானதின் இருள் அது.
நம் புற வாழ்வு இருளடையச் செய்வது அது.

It is a flame.
It is born out of the Divine.
It is a luminous inhabitant of the Ignorance.
Grows in it.
Grows till it is able to turn it towards knowledge.
It is concealed.
It is the Witness, Control, the hidden Guide.
It is the Daemon of Socrates.
It is the inner light or inner voice of the mystic.
It is that which endures.
It is imperishable in us from birth to birth.
It is untouched by death, decay or corruption.
It is an indestructible spark of the Divine.
Not the unborn Self or Atman.
The Self presides over the existence of the individual.
It is aware of its universality.
It is aware of its transcendentality.
It is yet its deputy in the forms of Nature.
It is the individual soul.
It is chaitya purusha.
It supports mind, life and body.
It stands behind the mental, the vital, the subtle-physical being.
It is watching them.
It is profiting by their development and experience.
There are other person – powers in Man.



அது எரிதழல்.
அது இறைவனில் பிறந்தது.
அஞ்ஞானத்துள் சுடர்விடும் தழல்.
அங்கு வளர்கிறது.
அஞ்ஞானத்தை ஞானத்தை நோக்கித் திருப்பும்வரை வளர்கிறது.
அது மறைந்துள்ளது.
அது சாட்சி, அதிகாரி, மறைந்துள்ள குரு.
அது சாக்ரடீஸ் சொல்லும் தெய்வம்.
ஆன்மீகவாதியின் அசரீரி, உட்ஜோதி.
நீடித்து வருவது அதுவே.
ஒரு பிறவியிலிருந்து அடுத்த பிறவி வரை அழியாதது அது.
அதை மரணம் தொடாது, அழிக்காது, கரைக்காது.
அது அழிக்கப்பட முடியாத இறைவனின் பொறி.
ஜனித்தறியாத பிரம்மமோ ஆத்மாவோ இல்லை.
மனித வாழ்வுக்குப் பிரம்மம் (ஆத்மா) தலைமை தாங்குகிறது.

தன் பிரபஞ்ச பரிமாணத்தை அறியும்.
தன் கடந்த நிலையை உணரும்.
இருந்தும் இயற்கையில் அதன் பிரதிநிதியாக உள்ளது.
அது ஜீவாத்மா.
அது சைத்திய புருஷன்.
மனம் உயிர் உடலை அது ஆதரிக்கிறது.
அது மனம், உயிர், சூட்சும சரீரத்தின் பின் உள்ளது.

அவற்றை கவனிக்கிறது.
அவற்றுடைய வளர்ச்சி, அனுபவத்தால் பயனடைகிறது.
மனிதனில் உள்ள இதர சக்திகள்.

They are beings of his being.
They are also veiled in their true entity.
But they put forward temporary personalities.
They compose of our individuality.
They have their combined superficial action.
They have their appearance of status.
We call all of them ourselves.
This is the inmost entity.
It takes form in us as the psychic Purusha.
It puts forward a psychic personality.
It changes and grows from life to life.
This is the traveler between birth and death.
It moves from death to birth.
We have our nature parts.
They are only its manifold and changing vesture.
At first the psychic being can exercise only a concealed influence.
It is a partial indirect action.
It acts through mind, life and body.
These parts of Nature have to be developed.
They are its instruments of self-expression.
It is long confined by their evolution.

It is missioned to lead man.
It is to lead him towards the light from Ignorance.
It is the light of the Divine Consciousness.
It takes all the essence of all experience.



அவனுடைய ஜீவனின் ஜீவன்கள்.
அவையும் தங்கள் உண்மை நிலையில் மறைந்துள்ளன.
அவையும் தற்காலிகமாக பர்சனாலிட்டிகளை எழுப்புகின்றன.
அவை நம் தனித்தன்மையாகும்.
அவை சேர்ந்த மேலெழுந்த செயலுண்டு.
அவற்றின் அந்தஸ்திற்குள்ள தோற்றம் உண்டு.
நாம் என்பது இவையெல்லாம் சேர்ந்தது.
இது ஆழத்தில் உள்ளே உள்ள அம்சம்.
இது சைத்திய புருஷனாக நம்முள் உருவாகிறது.
சைத்திய பர்சனாலிட்டியை இது முன்னுக்கு வைக்கிறது.
ஒரு பிறவியினின்று மறு பிறவிக்கு அது மாறி வளர்கிறது.
பிறப்பிலிருந்து மரணம் வரை வருவது இதுவே.
மரணத்திலிருந்து பிறப்புவரை தொடர்கிறது.
நமக்கு இயற்கையான பகுதிகள் உண்டு.
மாறிவரும் பல வண்ண ஆடைகளாகும் அவை நமக்கு.
ஆரம்பத்தில் மறைமுகமாகவே சைத்திய புருஷன் செயல்படும்.

இது மறைமுகமான பகுதியான செயல்.
இது மனம், உடல், வாழ்வு மூலம் செயல்படுகிறது.
இயற்கையின் இப்பகுதிகளை வளர்க்க வேண்டும்.
அவை தன்னை வெளிப்படுத்தும் கருவிகள்.
தம் பரிணாம வளர்ச்சியால் அவை நீண்டகாலமாக அளவுக்குட்படுத்தப்பட்டன.
மனிதனை வழி நடத்த விதிக்கப்பட்டது.
அஞ்ஞானத்திலிருந்து ஜோதிக்கு அவனை அழைத்துச் செல்லும்.
அது தெய்வீக ஜீவியத்தின் ஜோதி.
எல்லா அனுபவ சாரத்தையும் அது எடுத்துக் கொள்கிறது.

It is the experience of the Ignorance.
It forms a nucleus.
It is a nucleus of soul-growth in nature.
The rest it turns into material for the future growth.
They are of the instruments.
It has to be used until the instrument is ready.
It is a luminous instrumentation of the Divine.
This is the secret psychic entity in us.
This is the true original Conscience.
It is deeper than the constructed conscience.
It is conventional.
It is of the moralist.
It is this that points to the Truth and Right and Beauty.
It moves towards Love and Harmony.
This is the divine possibility in us.
It persists.
It later becomes a major need in us.
The psychic personality in us flowers.
It flowers as saint, sage, the seer.
It reaches its full strength.
It turns the being towards the Knowledge of Self.
Towards the supreme Truth, supreme God it turns.

It is the supreme Beauty, Love and Bliss.
They are the divine heights and largenesses.
It opens us to the spiritual sympathy.



அவை அஞ்ஞான அனுபவங்கள்.
அவற்றைக் கருவாக்குகிறது.
அது ஆத்ம வளர்ச்சியின் கரு. இயற்கைக்குரியது.
மீதியை அது எதிர்கால வளர்ச்சிக்குரியவையாக மாற்றுகிறது.
வளர்ச்சி கருவிக்குடையது.
கருவி தயாராகும் வரை இவற்றைப் பயன்படுத்தலாம்.
அது தெய்வத்தின் ஜோதிமயமான கருவி.
இது நம்முள் உள்ள இரகஸ்யமான சைத்திய புருஷன்.
இது ஆதியான உண்மை மனச்சாட்சி.
நாமே உருவாக்கிய மனச்சாட்சியை விட ஆழத்தில் உள்ளது.
அது மரபுக்குரியது.
தர்ம நியாயஸ்தனுடையது அது.
சத்தியம், நியாயம், அழகை நோக்கிப் போவது இது.

அன்பு, சுமுகத்தை நாடுவது இது.
நம்முள் உள்ள இறைவனுடைய வாய்ப்பு இது.
இது தொடர்கிறது.
நமக்கு இது அத்தியாவசியமாகும் வரை தொடரும்.
நம் சைத்திய புருஷன் மலர்கிறது.
ரிஷியாகவும், முனிவராகவும், சாதுவாகவும் இது மலரும்.
இது முதிர்ச்சியடைகிறது.
பிரம்ம ஞானத்தை நோக்கி நம்மை இது திருப்புகிறது.
உயர்ந்த சத்தியம், உயர்ந்த கடவுளை நோக்கி நம்மை திருப்புகிறது.
அது உயர்ந்த அழகு, அன்பு, ஆனந்தம்.
அவை இறைவனின் பரந்த சிகரங்கள்.
ஆன்மீக அனுதாபத்தைக் காட்டுகிறது.

They are the oneness and universality.
There is a contrary position.
There the psychic personality is weak.
It is crude, ill-developed.
The finer parts or movements in us are lacking.
Or poor in character or power.
The Mind may be forceful and brilliant.
The vital emotions and the heart may be hard and strong and masterful.
The life force may be successful and dominant.
The bodily existence may be rich and fortunate.
It may be an apparent lord and victor.
It is then the outer desire-soul mistaken.
It is the pseudo-psychic entity.
It reigns.
We mistake its misinterpretations.

We mistake them for psychic suggestions and aspiration.
Its ideals are mistaken as ideals.
We mistake its desires and yearnings for true soul stuff.
They are taken for the wealth of spiritual experience.
There is the secret psychic Person.
He can come forward into the front.
It can replace the desire-soul.
It can govern overtly and entirely.



அவை ஒருமை பிரபஞ்சப் பொறுமை.
இதற்கு எதிரான நிலையுண்டு.
அங்கு சைத்திய புருஷனுக்குத் திறனில்லை.
வளர்ச்சியில்லாத முரட்டு நிலையிலுள்ளது.
சிறந்த நுட்பமான நம் பகுதிகள் அங்கில்லை.
திறனற்று, தரமற்றுள்ளது.
மனம் பளிச்சென வலிமையாக இருக்கலாம்.
பிராணனின் உணர்ச்சி கல் போல வலுவான பலமுடையதாக இருக்கலாம்.
உயிர் வெற்றிகரமாக அதிகாரம் செலுத்தலாம்.
உடல் வாழ்வு நிறைந்து அதிர்ஷ்டமாக இருக்கலாம்.
பார்வைக்கு அது வெற்றிகரமாக அதிகாரம் செலுத்தலாம்.
அப்பொழுது ஆசையை நாம் ஆத்மாவாக தவறாக அறிகிறோம்.
அது வேஷம் போடும் சைத்திய புருஷன்.
அது அப்படி ஆட்சி செய்யும்.
அது எடுத்துக் கூறுபவற்றை நாம் தவறாகப் புரிந்து கொள்கிறோம்.
நாம் அவற்றைச் சைத்திய புருஷனின் ஆர்வமுள்ள சொல்லாகக் கருதுகிறோம்.
ஆசையின் இலட்சியங்களை நாம் இலட்சியமாகக் கொள்கிறோம்.
ஆசையின் ஆர்வத்தை நாம் ஆத்மாவின் கூற்றாகக் கொள்கிறோம்.
ஆன்மீக அனுபவமான பொக்கிஷமாக அதை நாம் கொள்கிறோம்.

இரகஸ்யமான சைத்திய புருஷனுண்டு.
அவன் வெளி வந்து முன் வரலாம்.
அது ஆசைக்கு மாற்று.
அது வெளிப்படையாக முழுமையாக ஆட்சி செலுத்தலாம்.

Not only partially from behind.
Can rule the outer nature of mind, life and body.
Then they can be cast into soul images of what is true.
It reflects what is right and beautiful.
In the end the whole nature can be turned towards the real aim of life.
It is the supreme victory.
It is ascent into spiritual existence.

But it might seem bringing the Psychic is all. ***Page 227 Para 11***
The psychic is the true soul in us.
We can bring it into the front.
We can give it there the lead and rule.
We shall gain all the fulfillment.
It is a fulfillment of our natural being.
It is all we can seek for.
It will open all the gates of the kingdom of the Spirit.
We may consider the fact as above.
It may well be reasoned that no other help is needed.
There is the superior Truth-Consciousness.
It is the principle of Supermind.
Its intervention helps.
It will help to attain the divine status.
It is the divine perfection.



மறைவாக பகுதியாக இல்லாமல் செய்யலாம்.
மனம், வாழ்வு, உடலை ஆட்சி செய்யலாம்.
உண்மையின் ஆத்மாவின் ரூபமாக அவை மாறும்.

நியாயம் அழகை அது பிரதிபலிக்கும்.
முடிவாக முழு சுபாவமும் உண்மையான இலட்சியத்தை நோக்கிச் செல்லலாம்.
அது மாபெரும் வெற்றி.
அது ஆன்மீக வாழ்வை நாடுவதாகும்.

சைத்திய புருஷனை வெளிக் கொணர்வதே அனைத்தும் என நினைக்கலாம்.
சைத்திய புருஷன் நம்முள் உண்மையான ஆத்மா.
நாம் இதை வெளிக்கொணர முடியும்.
வெளியில் அதற்குத் தலைமை தரலாம், ஆட்சி தரலாம்.
அதனால் எல்லா விஷயமும் பூர்த்தியாகும்.
அப்படி நம் சுபாவம் பூர்த்தியாகும்.
நாம் தேடக்கூடிய அனைத்தும் அதனுள் அடங்கும்.
அது ஆத்ம சாம்ராஜ்ய கதவுகளைத் திறக்கும்.

மேற்சொன்னது போல் நாம் நினைக்கலாம்.
வேறு எந்த உதவியும் தேவையில்லை எனக் கருதலாம்.

உயர்ந்த சத்திய ஜீவியம் உண்டு.
அது சத்திய ஜீவிய தத்துவம்.
அத்தத்துவம் வந்து உதவும்.
தெய்வீக நிலையை அடைய அது உதவும்.
அது தெய்வீகச் சிறப்பு.

We aim at the largest spiritual change.
It is not all that is needed.
One of the necessary conditions is the psychic transformation.
We aim at the total transformation.
The psychic is the individual soul in Nature.
Therefore it can receive.
It can reflect their light and power and experience.
It can open to the hidden divine ranges.
But there is another spiritual transformation.
It comes from above.
It is needed for us to possess the self.
The self has universality.
It has the transcendentality.
By itself the psychic can act.
At a certain stage it might be content.
There it can create a formation of truth.
It is the formation of good and beauty.
Thus it may make its station.
There is a further stage.
It might become passively subject to the world self.
It is a mirror of universal existence.
It reflects that consciousness, power, delight.
But it is not their full participant and possessors.
It is more nearly thrillingly united to the cosmic consciousness.
It is so in knowledge, emotion and even appreciations through the senses.



மிகப்பெரிய ஆன்மீக மாற்றம் நம் குறி.
இது மட்டுமே தேவை என்பதில்லை.
தேவைப்படும் நிபந்தனைகளுள் சைத்திய திருவுருமாற்றம் ஒன்று.

நாம் முழுமையான திருவுருமாற்றம் நாடுகிறோம்.
நம் சுபாவத்தின் ஆத்மா சைத்திய புருஷன்.
எனவே இதனால் பெற முடியும்.
அதன் ஜோதி, பவர், அனுபவத்தைப் பிரதிபலிக்க முடியும்.
மறைந்துள்ள தெய்வீக லோகங்களை அது காட்டும்.
வேறொரு ஆன்மீகத் திருவுருமாற்றம் உண்டு.
அது மேலிருந்து வரும்.
பிரம்மத்தைப் பெற அது தேவை.
பிரம்மத்திற்குப் பிரபஞ்ச லோகம் உண்டு.
பிரம்மம் கடந்ததையும் பெற்றுள்ளது.
சைத்திய புருஷன் தானே செயல்படலாம்.
ஒரு கட்டத்தில் அது திருப்தி படலாம்.
சத்திய ரூபத்தை அங்கு ஏற்படுத்தும்.
அது அழகின் உருவம், நன்மையின் உருவம்.
அங்கேயே நிலை பெறலாம்.
அடுத்த கட்டம் உண்டு.
அங்கு உலக ஆத்மாவுக்கு அடங்கி உடன்படலாம்.
அது பிரபஞ்ச வாழ்வின் பிரதிபலிப்பு.
அதன் ஜீவியம் பவர் ஆனந்தத்தைப் பிரதிபலிக்கும்.
முழுமையாகக் கலந்து ஆட்சி செய்வதில்லை.
பிரபஞ்ச ஜீவியத்துடன் முழுமையாகப் புல்லரிக்கும்படி இணைந்தது.

அப்படி ஞானம், உணர்ச்சி, புலனறிவால் போற்றும் குணம் இணைந்தது.

It might become purely receptive and passive.
Thus it can be remote from mastery.
Hence from the action in the world.
Or may become one with the static self.
It is behind the cosmos.
But it is separate inwardly from the world movement.
Thus it loses its individuality in its Source.
Or, it might return to the Source.
Its mission is to lead the nature to divine realization.

It will have no will for it.
Nor the power.
The psychic being came into Nature from the Self.
The Self is the Divine.
And it can turn back from Nature to the silent Divine.
It does so through the silence of the Self.
And it is a supreme immobility.
Again it is an eternal portion of the Divine.

This part is by the law of the Infinite inseparable from the Divine Whole.
This part is indeed itself the whole.
It is so except in its formal appearance.
It is its frontal separative self-experience.
It may awaken to that reality.
And plunge into it.



இருந்தால் பெற்று அடங்கும் நிலையை எய்தலாம்.
ஆட்கொள்ளும் திறன் வராது.
எனவே உலகின் செயலிலும் திறனற்றுவிடும்.
அல்லது சலனமற்ற பிரம்மத்துடன் இணையும்.
அது பிரபஞ்சத்தில் பின்னால் உள்ளது.
ஆனால் உலக செயலினின்று உள்ளூறப் பிரிந்து நிற்கும்.

தன் தனித்தன்மையை ஆதியில் இழந்துவிடும்.
அல்லது ஆதிக்குப் போகும்.
அதன் கடமை சுபாவத்தை தெய்வீக சித்திக்கு அழைத்துப் போவது.
அதைச் செய்ய உறுதியிருக்காது.
பவரும் இருக்காது.
பிரம்மத்திலிருந்து சைத்திய புருஷன் சுபாவத்திற்குள் வந்தது.
பிரம்மம் இறைவன்.
அது மீண்டும் சுபாவத்தினின்று மௌனமான இறைவனை நாடும்.
பிரம்ம மௌனத்தின் மூலம் திரும்பிப் போகும்.
அந்த மௌனம் உயர்ந்த அசைவற்ற நிலை.
மீண்டும் சைத்திய புருஷன் காலத்தைக் கடந்தவன், இறைவனின் பகுதி.
தெய்வீக முழுமை ஆனந்தமானதால் அதனின்றும் பிரியாது.

இதுவே முழுமை.
புறத்தோற்றம் தவிர மற்றதில் அப்படியே.
அது தோற்றத்தின் பிரிந்த சுய அனுபவம்.
அந்த சத்தியத்தை அறியும்.
அதனுள் மூழ்கும்.

It will do so to its apparent extinction.
Or at least merge into the individual existence.
It is a small nucleus in the ignorant nature.
It is described in the Upanishad as the size of thumb.
It can enlarge itself by a spiritual influx.
It can embrace the whole world.
It can do so with the heart and mind.
It can do so in an intimate communion and oneness.
It has an eternal companion.
And it may elect to live with him.
It is an imperishable union and oneness.
It is the eternal lover and Beloved.
It is the most intense spiritual experience.
It is divine rapture.
All these are great and splendid achievements.
It is our spiritual self-finding.
They are not necessarily the last end.
It is not the entire consummation.
Man has a spiritual mind.
These are its achievements.
They are movements of that mind.
Thus it passes beyond itself.
But it will still be on that plane.
It will enter into the splendors of the Spirit.
Mind acts yet in its nature.
Its nature is division.
Now it is far beyond our present mentality.



தன்னை அழிப்பதாகத் தோன்றும்படி அது செயல்படும்.
அல்லது தனி வாழ்வுடன் இரண்டறக் கலக்கும்.
அறியாத சுபாவத்தில் சிறிய கரு.
கட்டை விரல் பிரமாணம் என உபநிஷதம் கூறுகிறது.

ஆன்மீக விரிவால் அது பரவும்.
உலகனைத்தையும் அதனால் தழுவ முடியும்.
மனம் இதயத்துடன் அதனால் உலகைத் தழுவ முடியும்.
நெருங்கிய உணர்வின் ஒருமையுடன் அது செய்யும்.
காலத்திற்கும் உடன் வரும் ஜீவன் உண்டு.
அவனுடன் வாழ முடிவு செய்யலாம்.
அது அழியாத ஐக்கியம், ஒருமை.
அவனே காந்தன், கணவன் என்ற இறைவன்.
மிகத் தீவிர ஆன்மீக சித்தி அது.
அது தெய்வீக ஆனந்தம்.
இவை பெரிய அற்புத சித்திகள்.
நம் ஆன்மீக சுய அனுபவ முடிவுகள்.
அவை கடைசி முடிவல்ல.
முழுமை பூர்த்தியாகும் நிலையில்லை.
மனிதனுக்கு ஆன்மீக மனம் உண்டு.
இவை அதன் சாதனை.
அவை ஆன்மீக மனத்தின் கூறுகள்.
ஆன்மீக மனம் இவ்விதம் தன்னைக் கடந்து போகும்.
எனினும் தன் லோகத்திலேயே இருக்கும்.
ஆத்மாவின் அற்புதம் தரிசனமாகக் கிடைக்கும்.
மனம் இன்னும் தன் சுபாவத்தாலே செயல்படும்.
அதன் சுபாவம் துண்டு செய்வது.
நம் மனநிலையைக் கடந்த நிலை அதனுடையது.

It is at its highest stage.
It takes the aspects of the Eternal.
It treats each aspect as if it is the whole truth.
To it it is the whole truth of the Eternal Being.
It finds its fulfillment.
In each it finds it.
It erects them as opposites.
It creates a whole range of opposites.
The Silence of the Divine and the Divine Dynamics.
The immobile Brahman aloof from existence.
It is without qualities.
The active Brahman with qualities.
It is the Lord of existence.
Being and Becoming.
The Divine Person and an impersonal pure Existence.
It can then cut itself away from the one.
And plunge itself into the other.
It does so as the sole abiding Truth of existence.
It can regard the Person as the sole Reality.
Or the impersonal is alone true.
It can regard the Lover as only a means of expression of eternal Love.
Or love as only the self-expression of the Lover.

It can see beings only as personal powers of an impersonal Existence.



அதன் உச்ச கட்டத்தில் உள்ளது.
ஆனந்தத்தின் அம்சங்களை மனம் எடுத்துக் கொள்கிறது.
ஒவ்வொரு அம்சத்தையும் மனம் முழுமையாகக் காண்கிறது.
சாஸ்வத புருஷனின் முழு அம்சமாக பகுதியை மனம் கருதுகிறது.
தன் பூரணத்தை அங்கு காண்கிறது.
ஒவ்வொரு அம்சத்திலும் அதைக் காண்கிறது.
மனம் அவ்வம்சங்களை எதிரெதிரானதாக்குகிறது.
அது போன்ற ஒரு பெரிய வரிசையை ஏற்படுத்துகிறது.
பிரம்ம மௌனம், பிரம்ம சலனம்.
வாழ்வை விட்டு விலகி அசைவற்றுள்ள பிரம்மம்.
அதற்கு குணமில்லை.
குணத்தால் செயல்படும் பிரம்மம்.
அது சிருஷ்டி கர்த்தா.
ஜீவனும் ஜீவியமும்.
தெய்வ ஜீவன், பொதுவான தூய்மையான வாழ்வு.

ஒரு பக்கத்திலிருந்து தன்னை வெட்டிப் பிரிக்கும்.
அடுத்த பக்கத்துள் மூழ்கும்.
அதுவே நித்தியமான வாழ்வின் சத்தியமாகக் கொள்ளும்.
புருஷனை அது மட்டுமே நிலையானதாகக் கொள்ளும்.
அல்லது பொதுவானது மட்டுமே உண்மையெனக் கொள்ளும்.
காந்தனை சாஸ்வதமான அன்பின் வெளிப்பாடாக மட்டும் கருதும்.
அல்லது அன்பை காந்தனின் வெளிப்பாடு மட்டுமே எனக் கொள்ளும்.
ஜீவன்களை பொது வாழ்வின் சக்தியாக மட்டும் கருதும்.

Or impersonal existence as only a state of the one Being, the Infinite Person.
Its spiritual achievement will follow these dividing lines.
But the spiritual Mind is there.
Beyond this spiritual Mind is the higher experience.
It is that of the supermind Truth-consciousness.
There these opposites disappear.
These partialities are relinquished.
There is the rich totality.
It is a supreme integral realisation of eternal Being.
It is this that is the aim we have conceived.
It is a consummation of our existence here.
It is by an ascent to the supramental Truth-Consciousness.
And by its descent into our nature.
The psychic transformation rises into the spiritual change.
It has then to be completed, integralised and exceeded.
And it must be uplifted by a supramental Transformation.
Ours is an ascending endeavour.
The supramental transformation lifts it into the summit.

*Contd....*

❀❀❀



அல்லது பொது வாழ்வை புருஷனின், அனந்த ஜீவன் - ஒரு நிலையாகக் கொள்ளும்.
அது ஆன்மீக சாதனை இப்பிரிவில் முறைகளைப் பின்பற்றும்.

ஆன்மீக மனம் உண்டு.
இதைக் கடந்த உயர்ந்த அனுபவமுண்டு.
அது சத்திய ஜீவியம்.
அங்கு இந்த எதிர்ப்புகள் மறையும்.
இப்பகுதிகளை கைவிடலாம்.
செறிவான முழுமை இது.
சாஸ்வத புருஷன் உயர்ந்த இணைந்த நிலையில் சித்திக்கும்.
நாம் கருதும் இலட்சியம் இதுவே.
இங்கு நம் வாழ்வு சிறந்த பூரணம் பெற்று பூரிக்கும் விதம் இது.
சத்திய ஜீவியத்தை உயர்ந்து அடைந்து பெறுவது இம்முறை.

அது நம் சுபாவத்தை வந்து ஏற்றுக்கொண்டு சாதிக்கும்.
சைத்திய திருவுருமாற்றம் ஆன்மீக மாற்றத்தை உயர்ந்து அடைகிறது.
அதைப் பூர்த்தி செய்து இணைத்து கடந்து செல்ல வேண்டும்.

சத்திய ஜீவிய திருவுருமாற்றத்தால் அதை உயர்த்த வேண்டும்.

நாம் செய்வது உயரும் தவம்.
சத்திய ஜீவிய திருவுருமாற்றம் அதை சிகரத்திற்கு உயர்த்தும்.

*தொடரும்.....*

❀❀❀

## இம்மாதச் செய்தி

**குழந்தைகள்,**

**பெண்கள், ஏழைகள்,**

**தொழிலாளர்கள்,**

**ஒதுக்கப்பட்டவர்கள்,**

**பெரியவர்கள், ஆண்கள்,**

**செல்வர்கள், முதலாளிகள்**

**உயர்ந்தோராகும்**

**காலம் வந்துவிட்டது.**





## P.142 Existence half-real and half-dream

### கனவாகவும் வாழ்வாகவும் கனிந்து எழும் வாழ்வு

- ☆ வாழும் நம்பிக்கையற்ற ஒரு வாழ்வங்கிருந்தது
- ☆ சுவடறியாதபடி அழிந்த ஜீவன்கள் பிறந்தன
- ☆ உருவமற்ற நாடகத்தின் உறுப்புகளான நிகழ்ச்சிகள்
- ☆ குருட்டு ஜென்மம் செய்த செயல்கள் நிறைந்தவை
- ☆ தன் பாதையைச் செப்பனிடும் சக்தியின் தேடல்
- ☆ அன்பும், வலியும், மகிழ்வும் கொண்ட திட்டங்கள் எழுந்தன
- ☆ வாழ்வின் போக்கை விளக்கும் அடையாளச் சின்ன ரூபங்கள்
- ☆ பூச்சியின் மகிழ்ச்சி தவழ்ந்து ஊர்ந்து பறந்தது
- ☆ ஒளிமயமான இயற்கையின் மேலெழுந்த புல்லரிப்புகள்
- ☆ பூதத்தின் பூரிப்பு, மலைப்பாம்பின் வேதனை
- ☆ சேற்றிலும் சகதியிலும் ஊர்ந்து வந்து சூரியனை ருசித்தது
- ☆ நடுங்கும் நிலத்தை ஆட்டி வைக்கும் ஆயுத வலிமை
- ☆ குட்டை அறிவுடைய பெருவலி பெற்ற ஜந்துக்கள்
- ☆ சிறுமையின் கூட்டங்கள் அவர்கள் சிறுவாழ்வைத் திணித்தன
- ☆ குள்ளர்கள் கூட்டமான மனித குலம்
- ☆ இயற்கை தன் முடிவான அனுபவத்தை ஆரம்பித்தது
- ☆ அவள் திட்டத்தின் கிறுக்கு பெற்ற திறமையின் மகுடம்
- ☆ விழிப்பற்ற குருட்டு ஏற்றத்தின் ஒளிபொருந்திய பலன்

☆ உன்னத உயர்வு தாழ்விடையே அமைந்த படிகள்

☆ அணு உருவங்களினின்று பெருமலையளவு வரை

☆ உடலையும் ஆத்மாவையும் சூட்சுமமாகத் தராசில் நிறுத்தி

☆ அறிவுள்ள சிறுமையின் அழகுற அமைந்த அணி

☆ காலம் சிதறிய மணித்துளிகள் சூழப்பெற்று

☆ விலங்கு ஆத்மாவின் இராஜ்ஜியமாக எழுந்தது

☆ செயலே அனைத்தும், அறிவு ஜனிக்க நாளாகும்

☆ இதயம் காணாத ஊமைக் கட்டுப்பாட்டை ஏற்றது

☆ அறியாமையின் ஒளியால் செயல்படும் திறன்

☆ விலங்கில் அவன் பரிசோதனை ஆரம்பித்தது

☆ உலகத்தை விழிப்பானவரால் உய்விக்கும் அவள் திட்டங்கள் குழுமி

☆ வெளிப்படையாக வேகம் பெற்றவர்

☆ மேலெழுந்தவாரியாகத் தொடும் பதிலளித்தவர்

☆ வாழ்க்கை ஓட்டத்தை நடத்திய ஆணியின் குத்தல்

☆ தன்னுள்ளேயுள்ள ஆத்மாவையறிய முடியாத உடல்

☆ வாழ்ந்து, ஏங்கி, மகிழ்ந்து, நெகிழ்ந்து, கவலைப்பட்டு

☆ உலகை சந்திக்கும் உயரிய மனம்

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***எண்ணமழிந்தால் உணர்வுமயமாகும்.***

***சமர்ப்பணம் சர்வ அர்ப்பணம்.***



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/70) மேல் எழுந்த ஜீவன் என்பது உடல், உள்ளம், மனம் ஆகும். மனிதன் என நாம் அறிவது முழுவதும் மேல் நிலை ஜீவனாகும்.**

☆ **முழு மனிதனும் மேல் நிலைக்குரியவன்.**

✦ சிறு குழந்தைகள், கிராமத்து படிக்காத மக்கள் உலகத்தை அறிவது அவர்கள் பெறும் பலனால் அறிவதேயாகும்.

✦ உலகத்து மக்கள் அனைவரும் டெக்னாலஜி, சர்க்கார், சமூகம், பருவம் போன்றவற்றுள் சிறு குழந்தைகள் போன்றவரே.

✦ ஒரு பெரிய எழுத்தாளர் அல்லது கவியின் எழுத்துக்களை ஆராய்ந்தவர் அதைக் கடந்து அவர் மனத்தை அறிய முயன்றால், அவர் அறிவுக்கும் நம் மனத்திற்கும் உள்ளது தூரமில்லை, யுகங்கள் கடந்தவை எனப் புரியும்.

✦ ஒரு ஆசிரியர் பல பாத்திரங்கள் மனத்தை அறிந்து பேசுவதை நாம் கற்பனையாலும் அறிய முடியாது.

✦ அரிஸ்ட்டாடில் 400 புத்தகம் எழுதினார். அலெக்ஸாண்டர் டுமாஸ் 438 புத்தகம் எழுதினார். வியாசர் எழுதியவை உலகத்தையேயுட்கொண்டது. வால்மீகி இராமாயணமும், கம்பன் இராமாயணமும் அளவிலே கடல், பெரியது. நம் அறிவோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை.

✦ பஞ்சாங்கம் எழுதும் சாஸ்திரியும், அரசியல் சட்டம் எழுதிய நிபுணர்களும், சங்கரர் போன்ற சிறு வயது மேதைகளின் அறிவும், ஸ்ரீனிவாச இராமானுஜத்தின் கணித அறிவும் எளிய மனிதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியதில்லை.

- மேல் மனம் பள்ளிப் படிப்பைப் போன்றது. முழு மனம் நூல் நிலையம் போன்றது. ஏணி வைத்தாலும் எட்டாதது.
- முழு மனம் கடல், மேல் மனம் உப்பங்கழி.
- முழு மனம் நாட்டின் பார்லிமெண்ட் தேர்தல். மேல் மனம் உள்ளூர் கோவாப்ரேட்டிவ் சொஸைட்டி தலைவர் தேர்தல்.
- மேல் மனம் தனி மனிதனின் ஏட்டுப் படிப்பு. முழு மனம் ஞானியின் ஞானம்.
- மனிதன் வீடு கட்டி ஓர் அறையில் பல ஜன்னல்கட்கிடையே ஆசனத்திலமர்ந்து காற்றோட்டத்திற்காக மின் விசிறியைப் பயன்படுத்துவது மேல் மனம். மொட்டை மாடியின் காற்றோட்டமும், கடற்கரையின் சுதந்திரமும் முழு மனத்திற்குரியவை.
- பிரம்மம் தன்னை ஒரு குறிப்பிட்ட லோகத்தில் சுருக்கியது பிரபஞ்சம். பிரபஞ்சத்தை அறிவது பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ள அடிமனம். பிரம்மத்தை அறிவது ஐக்கியம். ஐக்கியத்துடன் நேரடி தொடர்புள்ளது யோகியின் ஞானம். அதிலிருந்து பிரிந்து பகுதியாக - கீழ்ப் பகுதியாக - எழுந்தது பிரபஞ்சம். பிரபஞ்சத்தை அதன் அஞ்ஞானம் மூலம் அறிவது அடிமனம். அடிமனம் உள் மனம் வழியாகச் சுருங்கி, தலைகீழ் மாறி ஒருவருடைய மனமாக அகந்தை, காலம், கண்டம், மனம் வழி செயல்படுவது மேல் மனம்.
- மனிதன் முழுமையானவன், தன் முழுமையை அறியாதவன்.
- முழுமை பாதாளத்தையும், பரமாத்மாவையும் சேர்த்தது.
- அதன் ஒளிமயமான மேற்பகுதி பரமாத்மா.
- அடி மனம் முழுமையின் இருள்மயமான பகுதி.
- மேல் மனம் அடி மனத்தின் கடுகு போன்ற சிறு பகுதி.
- மேல் மனத்தால் செயல்படும் மனிதன் அதுவே முழு மனம்



என அறிகிறான்.

- முழு மனமும் அடி மனம் மூலம் தனக்குண்டு என அறிய முடியாதவன் மனிதன்.
- அடி மனத்திலுள்ளவனுக்கு எவர் எண்ணமும், எந்த இடத்து நிகழ்ச்சியும், எந்தக் காலத்து நடந்தவையும் தெரியும்.
- சூட்சும மனம் அடி மனத்தைப் பெரும்பாலும் அறியும்.
- பாரதப் போரைக் குருடனான திருதராஷ்டிரன் பார்க்க விரும்பிய பொழுது கிருஷ்ண பரமாத்மா சஞ்சயனுக்கு சூட்சும திருஷ்டியைத் தந்து அதன் மூலம் போரைத் தெரிவித்தார்.

✲✲✲

**II/71) மாயை வரையறுக்கிறது. மனம் துண்டாடுகிறது. அறியாமை அறிவை விட்டு விலகி ஒருமைப்படுகிறது. அகந்தை சேகரம் செய்கிறது. அகந்தை ஒரு பிறப்புக்குரியது. மற்றவை பொதுவான சக்திகள். பிறவி முடிந்தாலும் தொடரும்.**

☆ **மாயையும், மனமும், ஞானமும் அகந்தையைக் கடந்த அதிகாரமுள்ளவை.**

- மாயை என்பது இல்லாதது, மாயமாய் மறைவது, புரியாமல், புரிந்து கொள்ள முடியாமல் எழுந்து திடீரென மறைவது என உலகம் அறியும்.
- இச்சொல் வேத காலத்தில் முதலில் எழுந்தது.
- உலகத்தின் ஆதியை வேதம் பிரம்மம் என்றது.
- உலகம் பிரம்மத்தினின்று எழுந்தது. எப்படி என நாமறியோம் என்றனர்.
- பிரம்மம் உருவமற்றது, சக்தியோ, குணமோ இல்லாதது. காலத்தைக் கடந்தது. எல்லாம் வல்லது, எல்லாமறிந்து, எந்த

நேரமும் எந்த இடத்திலும் ஆனந்தமானது என்றனர்.

- மாயை பிரம்மத்தின் இயற்கை என்று பகவான் கூறுகிறார்.
- மயன், தெய்வ லோக சிற்பியாகும். அவன் பெற்ற சக்தி மாயை.
- வேதம் மாயைக்குப் பொருள் கூறியது. அளவிட்டு, வரையறை செய்து, வெட்டிப் பிரிப்பது என்றது.
- பிரம்மம் சிருஷ்டிக்கப்படவில்லை. பிரம்மம் சிருஷ்டிக்காதது. என்றாலும் அனைத்தையும் பிரம்மம் தன்னுட்கொண்டது என்பது பகவான் கூறுவது.
- பிரம்மம் சிருஷ்டிக்கப் பயன்படுத்தும் 3 சக்திகள்: சுய சிந்தனை, சுய அளவு, சுய கிரகிப்பது.
- சிந்தனையால் பிரம்மம் அசையாத சத்தியத்தை அசையும் சத்தியமாக்குகிறது.
- அசையாத சத்தியம் சாரமான சக்தியைப் பெற்றுள்ளது.
- அசையும் சத்தியம், முறையான சக்தி சிருஷ்டிக்குரியது.
- இந்த மாற்றத்தைச் செய்வது மாயை.
- பிரம்மத்தின் புறம் சச்சிதானந்தம்.
- சச்சிதானந்தத்தின் புறம் சத்திய ஜீவியம்.
- சத்திய ஜீவியம் காலத்தால் இரண்டாகப் பிரிகிறது.
- அவற்றிடையே உற்பத்தியாவது மனம்.
- பிளவால் உற்பத்தியான மனம் பிளக்கும் கருவி.
- பிரம்மம் உலகை நாடும்பொழுது ஆன்மீகப் பொருளாகிறது.
- ஆன்மீகப் பொருளை மனம் புலன் மூலம் காண்பது ஜடப்பொருள்.
- ஜடத்தை மனமும் வாழ்வும் துண்டு செய்து, சேர்க்கின்றன.
- துண்டானது அணுவாகிறது.
- அணுக்கள் சேர்க்கப்பட்டது, அதன் தொகுதி, ஜடம்.



- எனவே ஜடம் பிரம்மம்.
- ஜடம் சித்தாகும்.
- ஜடம் அனந்தமாகும்.
- துண்டு தான் தனி என உணர்வது அகந்தை.
- ஜடத்தின் அகந்தையை மேலும் பிரிக்க அது அனுமதிப்பதில்லை.
- பிறவி முடிந்தால் அகந்தையும் அதன் நினைவும் முடிகிறது.
- பிறவி முடிந்தாலும் ஜீவன் தொடரும்.
- அதற்கு மறுபிறவி, புனர் ஜென்மம் எனப் பெயர்.
- மறுபிறவியில் முன்பிறவி நினைவிருக்காது.
- முன் பிறவியில் பெற்ற திறமை இப்பிறவியில் செயல்படும்.
- புனர் ஜென்மத்தில் ஜீவன் வளரும்.
- ஜீவனின் ஞானம் பரிணாமத்தால் வளர்கிறது.
- ஜீவனின் பரிணாம வளர்ச்சியை ஆன்மீகப் பரிணாமம் என்கிறோம்.
- பகவானுடைய யோகத்தின் மறு பெயர் ஆன்மீகப் பரிணாம யோகம்.
- ஆன்மீகப் பரிணாம யோகம் முழுமையுடையது.
- பூரணமான முழுமை (integrality) புதிய யோகத்திற்குரியது.
- இதை முதலில் கூறியவர் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அழைப்பு வேறு, அன்னை வேறில்லை.***

## P.313 Brahman, in the tradition, is a self-contained Being

### மரபு பிரம்மத்தை மனிதனுக்கெட்டாத நிலையில், உலகுடன் தொடர்பற்றதாகக் கூறுகிறது

- ✦ பகவான் பிரம்மத்தை ஜீவனாக வர்ணிக்கிறார்.
- ✦ அனைத்தையும் தன்னுட்கொண்ட பிரம்மம் உயிரற்ற ஜடமாக எப்படியிருக்கும்?
- ✦ பிரம்மம் ஜீவன், தன்னையறியும் ஜீவன், தன்னை மட்டும் நம்பியுள்ள ஜீவன், தன்னைத் தவிர வேறெதுவுமில்லையென அறியும் ஜீவன், a Self-Conscious Being.
- ✦ ஜீவனுக்குப் பவர் (power) உண்டு. பவரில்லையெனக் கூற முடியாது.
- ✦ ஜீவன் தன்னுள் உள்ள சத்தியத்தை கண்டு அதற்குத் தன் பவர் மூலம் ரூபம் தருவது சிருஷ்டி.
- ✦ அதை மனிதன் தன் ஆத்ம புலனால் காணும் பொழுது பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்டதைக் காண்கிறோம்.
- ✦ இதுவே சிருஷ்டியின் தாத்பர்யம், வழி, வகை, முறை, complete process.
- ✦ இதைச் செய்வது மாயை.
- ✦ மாயை என்பது ஜீவனின் செயல்.
- ✦ மாயை ஜீவனின் தலைகீழான செயல்.



- ✦ மாயை ஜீவனை மறுப்பதாகத் தோன்றும்.
- ✦ மாயை ஜீவனின் செயல் என்றால் ஜீவனுக்கு எதிராக ஜீவனின் ஜீவியம் எழுப்பும் செயல் என்கிறார் பகவான்.
- ✦ இந்த ஜீவனை பகவானும், அன்னையும் Supreme என்கிறார்கள். உயர்ந்த கட்ட உச்சியில் உள்ள ஜீவனை Supreme எனக் கூறுகிறார்கள்.
- ✦ இதிலிருந்து எழும் ஒரு அதிர்வு, vibration, கதிர் எனவும் கூறக் கூடியது, கோடிக்கணக்கான பிரபஞ்சங்களை ஊடுருவித் தழுவும் என்கிறார் பகவான்.
- ✦ எதை அறிந்தால் அனைத்தையும் அறிய முடியுமோ அதுவே பிரம்மம்.
- ✦ பிரம்மம் ரூபமற்றது, குணமற்றது. மேலும் எந்த ரூபத்தையும், குணத்தையும் பெற வல்லது.
- ✦ குணமற்றது, குணத்தைப் பெற முடியும் எனில் எதிரெதிரானவற்றை ஏற்கக் கூடியது.
- ✦ ஒரே சமயத்திலும் ஏற்கக் கூடியது. எனவே முடிவு இல்லாதது. அந்தமற்றது அனந்தம்.
- ✦ மனிதன் இந்த பிரம்மம்.
- ✦ உலகம் இந்த பிரம்மம்.
- ✦ பிரம்மம் தவிர உலகில் எதுவுமில்லை.
- ✦ உலகிலுள்ளவை அனைத்தும் பிரம்மம் - சர்வம் பிரம்மம்.
- ✦ ஆத்மா மூலம் ரிஷி உலகை அறிகிறார்.
- ✦ பிரம்மம் உலகமாக சிருஷ்டியாவது ஆனந்தம் பெற.
- ✦ ஆனந்தம் பிரம்மத்தின் அனுபவம்.

❋❋❋

## P.315 Sri Aurobindo sitting on the compound and all were inside Him *(Vol. III)*

## August 15, 1962இல் தியானத்தின்பொழுது பகவான் ஆசிரம காம்பவுண்டு மீது அமர்ந்து அனைவரையும் தன்னுட் கொண்டிருந்தார்

- பெரியவர்களை தரிசிக்கும் பொழுது அவர்களுடன் இரண்டறக் கலப்பதாக உணர்வதுண்டு.
- ஆசிரமத்தில் இறந்த சாதகர்கள் ஆத்மா அனைத்தும் அன்னை தம் நெஞ்சில் குடி கொண்டுள்ளதாகக் கூறுகிறார்.
- தாயார் அன்பால் குழந்தைகள் தன் பகுதியாக உள்ளதை அறிவார். அவர் தியானத்தில் குழந்தைகள் அவருள் தெரியும்.
- தியான மையம் நடத்துபவர்க்கு தியானத்தில் அன்பர்கள் தெரிவதுண்டு. மையத்துள் தெரிவதுண்டு, தன்னுள் தெரியும்.
- பிரபஞ்சத்தில் ஏகனும் அநேகனும் உள்ளனர். அநேகன் என்பது இலட்சக்கணக்கான ஜீவாத்மாக்கள்.
- ஜீவாத்மா சித்திப்பது மோட்சம். அதற்கு ஏகன் என்ற பரமாத்மா சித்திப்பது உயர்ந்த மோட்ச நிலை. அதைக் கடந்த 3 நிலையும் உண்டு.
- பூரணயோகம் மோட்சத்தை நாடாது, ஜீவாத்மா சித்தித்தவுடன் அடுத்த ஜீவாத்மாக்களுடன் இணைய முயலும். அடுத்த கட்டத்தில் பரமாத்மா - ஏகன் - வுடன் இணையும். மோட்சப் பாதையைத் தவிர்க்கும்.
- ஜீவாத்மாக்கள் சித்திப்பது பிரபஞ்சம் சித்திப்பது. இதற்கு



அகந்தை கரைய வேண்டும். பரமாத்மா சித்திப்பது கடந்தது சித்திப்பது. அதுவும் சித்தித்தபின் மனிதனுள் வெளிப்படுவது ஆத்மா ஈஸ்வரனாகி, அற்புதம் வெளிப்படுவது.

- பகவானும் அன்னையும் சாதகர்கள் அனைவரையும் தங்கள் ஆத்மாவினுள் ஏற்று அனுக்கிரகம் செய்கிறார்கள்.
- குடும்பத் தலைவர் குடும்பத்தினர் அனைவர் தேவைகளை ஏற்பது போல் சாதகர்கள் அனைவரின் ஆன்மீக தேவைகளை பகவான் தருகிறார்.
- குடும்பம், தொழில் (கம்பனி), கட்சி, பெரும் பண்ணை நடத்துகிறோம். நாம் குடும்பத்துடன் எந்த அளவுக்கு ஆத்மாவில் இணைந்துள்ளோம் என அறிய தியானத்தின் போது அதைக் காண முயலலாம். கொஞ்ச நாள் கழித்து அது பலிக்கும் வாய்ப்புண்டு.
- அந்த நேரம் நாம் பிரியத்தால் ஏற்றுக் கொண்ட அனைவரும் நம்முள் தெரிவர்.
- கணவன், மனைவி, உடன் பிறந்தவர் அன்னியோன்யமாக இருப்பதுண்டு. பிறர் தியானத்தில் ஒருவர் வந்தால் உடன் அடுத்தவரும் வருவார். அவர்கள் ஆத்மாவில் இணைந்தவர்கள்.
- அன்னியோன்யமான தம்பதிகளும், வெறுப்பால் பிரிந்த தம்பதிகளும் தியானத்தில் அடுத்தவரைத் தவறாது காண்பதுண்டு.

  வெறுப்பு தீவிர அன்பு. வெளிப்பாடு எதிராக அமைந்துள்ளது.
- பார்த்து பல வருஷமானவர் தியானத்தில் வந்தால், சில நாட்களில் அவரைச் சந்திக்க நேரும். உருவம் அதிக தெளிவாக இருந்தால், கதவைத் திறந்து கொண்டு கண்ணில் படுவார்.
- மனக்கண், அகக்கண், ஞானக்கண் என்பவை செயல்படும் வகை வேறுபடும்.

- மனக்கண் நினைவிலிருப்பதைக் காட்டும்.
- அகக்கண் ஆத்மாவின் கண். ஆத்மாவின் அம்சம் அதில் தெரியும்.
- ஞானக் கண் எதிர்காலத்தைக் காட்டும்.
- குடி தண்ணீரில்லாத ஊரில் கூலிக்காரன் கனவில் ஊரில் மூன்று போகம் பயிராவது வரும். பத்து ஆண்டுகட்குப் பின் ஊரில் அனைவரும் கிணறு தோண்டி மூன்று போகம் பயிர் செய்தனர்.
- அத்தை மகளை மணக்க விரும்புபவன் கனவில் அவள் தங்கை வரும். திருமணமாகும் பொழுது கனவில் கண்டவளே மனைவியாக வருவாள். இது சூட்சுமப் பார்வை.
- ஒருவர் கல்லூரி விருந்திற்கு 2 அமெரிக்கர்கள் வந்தனர். 14 வருஷம் கழித்து அந்த விருந்தை ஏற்பாடு செய்தவரை நாடி இரு அமெரிக்கர் வந்து அவருடனே தங்கினர். நிகழ்ச்சி ஞானக் கண்ணாக செயல்பட்டுள்ளது.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***மௌனம் சாதிக்கும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னையைக் காண ஆயிரம் கண்கள் போதாது.***
***அகக்கண் ஒன்றே போதும்.***
***அன்னை தரிசனம் அகம் பெறும் அதிர்ஷ்டம்.***



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 62. தொழிலின் உச்ச கட்டத்தை அடைவது - வளர்ச்சி

- அறிவு, வீரம், செல்வம், சேவை உச்ச கட்டத்தை அடைந்தால் மோட்சம் பெறும் என்பது வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படை.
- **இந்தியப் பண்பாடு ஆன்மீக அடிப்படையுள்ளது. அதன்படி சமையல் வேலை, ஏர் உழுவது, கசாப்புக் கடை போன்ற எந்த வேலையையும் சிறப்பாகச் (perfect) செய்தால் மோட்சம் கிட்டும் என்பது தத்துவம்.**
- மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, அரசியலை ஆன்மீக அடிப்படையில் செய்ததால் மகாத்மா காந்திஜீயாகி, அரசியலில் துறவறம் பூண்டு தான் பெற்ற அதிகாரத்தை - பிரதமர், ஜனாதிபதி - மனத்தாலும் கருதவில்லை. இது இந்தியாவில் மட்டுமே நடந்தது.
- தொண்டன் காமராஜ் நாட்டின் அரசியல் தலைமையை எட்டியதும் அவர் தொழிலின் உச்ச கட்டத்தை சிறப்பாக அடைந்த காரணத்தால் தான்.
- *செய்வன திருந்தச் செய்* என்ற சொல்லின் மூலம் மோட்சம், பூரண யோக வாயில் திறப்பது.
- உச்ச கட்டத்தை சிறப்படையாமல் எட்ட முடியாது.
- சிறப்பை உச்ச கட்டம் தொடாமல் அடைய முடியாது.
- உச்ச கட்டம் தொடுமுன் சிறப்படைய பூரண யோகம் பூர்த்தியாக வேண்டும்.
- உச்ச கட்ட சிறப்பு பூரண யோக வாயில்.
- மனித உடலை இறைவன் ஏற்குமுன் பல உருவங்களைக் கருதி

மறுத்ததாக ஆன்மீக வரலாறு.

- தோற்றத்தில் மனித உடல் விலங்கின் உடலாக இருந்தாலும் நிமிர்ந்து நிற்பதால் பார்வை பூமியை நோக்கிப் போகாமல், நேராக இருப்பது முதல் தெய்வாம்சம்.
- **மனித உடலின் சிறப்பு, எல்லாக் கரணங்களும், எந்த நேரமும் க்ஷணத்தில் செயல்படத் தயாராக இருப்பதேயாகும்**.
- விலங்கிற்கும் அது உண்டு என்றாலும், விலங்கு உணர்ச்சியால் செயல்படுகிறது.
- உணர்வாலான பூரணம், அறிவால் எழுவது மனித உடலின் மகிமை.
- அறிவால் எழும் பூரணம் ஆன்மாவால் எழுவது சத்திய ஜீவியம்.
- *கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா* என பத்தினியால் பேச முடிவது இந்தப் பூரணம் அவளைக் கடமையால் நாடுவதால் எனப் புராணம் எடுத்துக் கூறுகிறது.
- தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா போய் நிரந்தரமாகக் குடியேறிய பெண், அமெரிக்க செல்வ வளத்தை அனுபவித்து, அதை விட்டு விட்டு ஒரு அமெரிக்கப் பெண் இந்தியாவில் வந்து 30 ஆண்டாகக் குடியேறியதை நினைத்து வியந்தாள்.
- இந்தியப் பெண் அற்புதமான பக்தியுடையவள். உடலில் ஒளியுள்ளவள். எதற்கும் அன்னையை நாடுபவள். அவள் பக்தியின் ஆழம் வாழ்வின் வண்ணங்கள். அவளுக்கு அமெரிக்க வாழ்வின் வசதி பிரம்மாண்டம். அன்னை அவளுக்கு திறந்து காட்டிய ஆன்மீகக் கோயில் கட்டிடமாகத் தெரிந்தது. அமெரிக்கப் பெண் சிறு வயது முதல் வாழ்வை அமெரிக்கப் பெண்ணாக அனுபவித்தவள். அன்னை ஸ்பர்சம் அமெரிக்காவிலில்லை. அமெரிக்காவில் அவளால் 15 நாள் தங்க முடியவில்லை. மூச்சு விட முடியவில்லை. அன்னை ஸ்பர்சம் அமிர்தமானது எனக் கண்டவள். அவள் ஏற்ற **வேலையை உச்ச கட்டத்தில் சிறப்பாகச் செய்ததால், அவளுக்கு அன்னை ஸ்பர்சம் ஆத்மாவில் கிடைத்தது**.



- தொழிலைச் சிறப்பாக உச்ச கட்டத்தில் செய்ய வேலையாகச் செய்ய முடியாது. ஜீவன் முழுவதும் அதை இறைவனின் சேவையாக ஏற்க வேண்டும். அதைக் குடும்பமும், ஊரும், உலகமும் ஏற்ற பின்னரே ஒருவர் எட்ட முடியும். 300 ஆண்டுகளாக ஆங்கில நாகரிகத்தை நாம் ஏற்றிருந்தாலும் விஞ்ஞானி என்று ஒரு பெரிய ஆத்மா நம் நாட்டில் பிறக்காததற்குக் காரணம் அந்தச் சூழலில்லை. அமெரிக்கச் செல்வம், செல்வாக்கு, படிப்பு அனைத்தும் ஒரு மகானை 400 ஆண்டாக உற்பத்தி செய்ய முடியவில்லை. நம் நாட்டில் நாம் விருப்பப்பட்டு கோவிலுக்குப் போகிறோம். 1940 முதல் 1980 வரை கோயில்கள் வெற்றிடமாக இருந்தன. 1980க்குப் பின் மக்கள் திரளாக கோயில்கட்கு வந்தனர். அமெரிக்காவில் 1960 வரை எந்த கிருஸ்துவரும் சர்ச்சிற்குப் போகாமலிருக்கமாட்டார். அவர்கள் பாதிரிமார்களை சிருஷ்டித்தனர். மகான், சன்னியாசி, தவசி, முனி, ரிஷி, யோகி அந்த நாட்டில் பிறக்கவில்லை. இந்தியா புண்ணிய பூமி. இந்தியருடம்பில் ஜோதி தங்கியுள்ளது.

*தொடரும்.....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னையிடம் கூறு; மற்றவர்களிடம் கேட்காதே.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***தேவை எழுந்தால், தானே பூர்த்தி செய்து கொள்ளும்.***

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 4. உன்னைத் தேடி வரும் அன்னை

யோக மார்க்கத்தில் ஈடுபட்டிருந்த ஒரு பக்தர், தம் வீட்டில் நண்பர் ஒருவரிடம் அது பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென சுவரில் ஸ்ரீ அரவிந்தரின் உருவம் பொன்னொளியுடன் காட்சி அளித்தது. உடனே பக்தர் எழுந்தோடி அதைச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார்.

ஆசிரமப் பள்ளியில் பயின்ற ஒரு பன்னிரண்டு வயதுக் குழந்தை, தினமும் சமாதிக்குச் சென்று வணங்குவது வழக்கம். அந்தக் குழந்தை ஒரு நாள் சமாதியில் வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு பூவிலும் அன்னையின் உருவத்தைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனாள்.

ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் தமது யோக மார்க்கத்தில் செல்லும் பக்தர்களை ஆசீர்வாதம் செய்வதற்காக சூட்சும வடிவில் தோன்றிக் காட்சி தரும் இவ்வாறான நிகழ்ச்சிகள் ஏராளமாக இருக்கின்றன.

இராகு காலம், எமகண்டம் போன்ற விஷ வேளைகளுக்குக் கடுமையான குணம் உண்டு. ஒரு வியாழக்கிழமை காலை 6 மணிக்கு ஓர் என்ஜினீயர் மயிலம் முருகன் கோவிலுக்குத் தம் குடும்பத்துடன் ஒரு குதிரை வண்டியில் புறப்பட்டுச் சென்றார். புறப்படும் சமயத்தில், ''நல்ல கொழுத்த எமகண்டத்தில் புறப்படுகிறீர்களே!'' என்று எச்சரித்தார் அவருடைய நண்பர் ஒருவர். "நான் முருகனைத் தரிசிக்கப் போகிறேன். எமகண்டம் என்னை என்ன செய்யும்?'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார் அவர்.



போகும் வழியில் அவர் சென்ற குதிரை வண்டியும் ஒரு லாரியும் மோதிக் கொண்டு, அவர் உயிரைப் பறித்துவிட்டன. எமகண்டத்திற்கு அந்தக் கடுமையும், கொடுமையும் உண்டு.

இன்னொருவர் சகுனங்களில் நம்பிக்கை இல்லாதவர். வெளியில் நெருப்பாகக் கொளுத்திய சித்திரை மாதத்து நாள் ஒன்றில் அவர் வீட்டில் நெல் அவித்தார்கள். அவர் வேண்டும் என்றே இராகு காலம் பார்த்து நெல்லைக் காயப்போடச் சொன்னார். அவர் மனைவி, "இராகு காலம் போகட்டுமே, பிறகு நெல்லைக் காயப்போடலாம்" என்றார். "இராகு காலத்திற்குக் கொம்பா இருக்கிறது? குருட்டு நம்பிக்கையைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, பேசாமல் நெல்லைக் காயப்போடு" என்று அதட்டினார் கணவர். சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கையுள்ள அவர் மனைவிக்கு அவர் கருத்தில் உடன்பாடில்லை. என்றாலும் கணவரின் கூற்றை மறுதலிக்க முடியாமல், மொட்டைமாடியில் நெல்லைக் காயப்போட்டார்.

அந்தச் சமயத்தில் 'சுள்'ளென்று வெயில் அடித்தது. மழை வருவதற்கான அறிகுறி சிறிதுகூட இல்லை. அந்த அளவுக்கு நிர்மலமாக இருந்த வானத்தில் திடீரென்று மேகக்கூட்டம் திரண்டது. சற்று நேரத்திற்குள் மழை 'கொட்டு, கொட்டு' என்று கொட்டித் தீர்த்துவிட்டது. அதனால் மொட்டைமாடியில் காயப் போட்ட நெல் நனைந்து வீணாகிப்போனதுடன், அதை அள்ளுவதற்காக மழையில் நனைந்த அந்த மனிதருக்கும் கடுமையான ஜுரம் வந்துவிட்டது.

நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ, இராகு காலமும், எமகண்டமும் அதனதன் தீமையைச் செய்யத் தவறுவதில்லை. 'அன்னையை ஏற்றுக் கொண்டவர்கள் இதைக் கருதலாமா?' என்று கேட்டால், 'கருத வேண்டியது இல்லை' என்பதுதான் அதற்கான பதில். அதாவது அன்னையிடம் தீவிரமான நம்பிக்கையுள்ள பக்தர்களுக்கு இராகு காலமும், எமகண்டமும் சேவை செய்யும். ஆனால் அவை தம் குணத்திற்கு ஏற்பவே அந்தச் சேவையைச்

செய்யும். அதாவது, அவை இரண்டும் தம் இயல்பான கெடுக்கும் குணத்தை இழந்துவிட மாட்டா. ஆனால் நம்மிடம் எந்தக் கெட்ட விஷயத்தை நீக்க வேண்டுமோ, அதை நீக்க மட்டுமே அவை தம் சக்தியை உபயோகப்படுத்தும்.

சாதாரணமானவர்களுக்கு அந்த இரண்டும் துன்ப நிகழ்ச்சிகளை விளைவிக்கும். அன்னையின் அன்பர்களுக்கு அவை துன்பத்தை தரும் குணங்களை விலக்கும். இப்பொழுது இரண்டுக்கும் உள்ள வேறுபாடு நன்கு புரியும் என்று நினைக்கின்றேன்.

அதற்கு ஒரு நிகழ்ச்சியைச் சான்றாகக் கூறலாம். நிலவள வங்கியின் அதிகாரி ஒருவர், அன்னையின் பக்தர் ஒருவருக்கு நண்பர். அன்னையின் பக்தர் ஒரு பெரிய விவசாயி. அவர் தம் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக நிலவள வங்கியில் இருபத்தையாயிரம் ரூபாயைக் கடனாக வாங்கிக் கொடுக்கும்படி அந்த அதிகாரி நண்பரிடம் கேட்டுக்கொண்டார். அவரும் மகிழ்ச்சியுடன் அந்த அன்பரிடம் ஒரு விண்ணப்பத்தை எழுதிக் கையெழுத்திடும் பொழுது சரியான இராகு காலம். பிறகு அதிகாரி அவரை வங்கியின் செயலாளரிடம் அழைத்துக்கொண்டு போய் அறிமுகப்படுத்தி வைத்து, விண்ணப்பத்தைக் கொடுத்தார். செயலாளர் வேண்டாத கேள்விகளை எல்லாம் கேட்டு, அந்த அன்பரையும், அவரை அழைத்துக்கொண்டு போன அதிகாரியையும் வெறுப்படைய வைத்தார். ‘விட்டால் போதும்’ என்ற எண்ணத்தில் இருவரும் எழுந்து வந்துவிட்டார்கள்.

கடன் முயற்சி தோல்விதான். இராகு காலத்தில் அவர் விண்ணப்பத்தில் கையெழுத்துப் போட்டதன் விளைவுதான் அது என்றாலும், அவர் அன்னையின் பக்தர் அல்லவா? விஷத்தைக் கக்குவதைப் போல அமைந்த விளைவு, எதிர்பாராத நன்மை ஒன்றுக்கு விதைத்த விதையாக மாறிவிட்டது. பக்தரின் நேர்மையையும், அவருடைய விவசாய முக்கியத்துவத்தையும் கேள்விப்பட்ட இந்தியன் வங்கி, அவருக்கு இரண்டு இலட்ச ரூபாய்



கொடுக்க முன்வந்து, அவருடைய சொத்துப் பத்திரங்களை அவசரமாகக் கோரியது. நிலவள வங்கி கடன் கொடுக்க முன்வந்திருந்தால், அவருடைய சொத்துப் பத்திரங்கள் அங்கே அடமானமாக வைக்கப்பட்டிருக்கும். இராகு காலம் நிலவள வங்கிச் செயலாளர் மூலம் கொடுத்த தொந்தரவால் கடன் பெறும் வழி அடைபட்டு, அதன் காரணமாகச் சொத்துப் பத்திரம் அவரிடமே தங்கி இருந்தது. எனவே அவர் பத்திரத்தை உடனே இந்தியன் வங்கியில் சமர்ப்பித்து, ஒரு பெரிய தொகையைப் பெற்று, விவசாயத்தைப் பெரிய அளவில் அபிவிருத்தி செய்ய முடிந்தது.

இராகு காலத்தில் ஏற்பட்ட தடை, பிறகு நன்மையாக மாறி நடைபோட்ட அபூர்வ நிகழ்ச்சிகள், அன்னையின் பக்தர்கள் வாழ்வில் ஏராளமாக நிகழ்ந்தது உண்டு.

காலத்திற்கும் காலம் வகுப்பவர் அன்னை.

‘அவ்வளவுதான், அது முடிந்துவிட்டது. அதற்கு மாற்று வழியே இல்லை’ என்ற நிலையில், ஒருவர் என்ன செய்ய முடியும்? பரீட்சையில் தவறிவிட்டதாக ஒரு செய்தி வந்த பிறகு, அதற்கு மாற்று ஏது? ஆனால் அன்னையின் பக்தர்களுக்கு மட்டும் மாற்று வழி எப்பொழுதும் இருக்கிறது. அந்த மாதிரிச் செய்தி வந்தவுடன் இடிந்துபோய் உட்கார்ந்துவிடாமல், தீவிரமான நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்யக்கூடிய பக்தர்களின் வாழ்வில் அன்னை செயல்படுகிறார். அன்னை ஏதாவது ஒரு வழியில் செயல்பட்டு விஷயத்தை மாற்றிவிடுவார். பரீட்சையில் தேர்வு பெறாதவர், தேர்வு பெற்றுவிட்டதாகப் பிறகு ஒரு செய்தி வந்து சம்பந்தப்பட்டவரைத் திக்குமுக்காடவைக்கும்.

‘விஷயம் முடிந்துவிட்டது’ என்ற நிலையில் பிரார்த்தனை செய்வதற்கு அதிக நம்பிக்கை வேண்டும். அத்தகையவர்கள் பின்னால் செய்யப்போகும் பிரார்த்தனைக்காக, அன்னை முன்கூட்டியே பல சந்தர்ப்பங்களைத் தயார் செய்து வைத்திருப்பது பல அன்பர்களின்

அனுபவம். ஒரு பக்தருக்கு அவருடைய சகோதரியின் கணவர் இறந்துவிட்டதாகத் தந்தி வந்தது. 'அப்படி இருக்காது; இருக்க முடியாது!' என்று நினைத்த அவர், அன்னையைப் பிரார்த்தனை செய்து கொண்டு ஊருக்குப் போய்ப் பார்த்தால், அவருடைய சகோதரியின் கணவரே அவரை வரவேற்றார். பிறகு மெதுவாக விசாரித்தபொழுது, அவரிடத்தில் கோபம் கொண்ட ஒருவர் கொடுத்த பொய்த் தந்தி அது என்பது தெரியவந்தது.

'அன்னையை ஏற்றுக்கொள்வது' என்பதற்குப் பல கட்டங்கள் இருக்கின்றன. அன்னையைத் தெய்வமாக அறிந்து, அவரது தெய்வீக சக்தியின் பல அம்சங்களையும் விளக்கமாகப் புரிந்துகொண்டு, அவற்றின் உட்கருத்தைத் துய்த்துணர்ந்து, ஆத்மாவில் அன்னையின் உருவத்தைப் பிரதிஷ்டை செய்து, வாழ்க்கையையும், அறிவையும், உடலையும் பூரணமாக அர்ப்பணம் செய்து வழிபடுதல் என்பது உயர்ந்த வழிபாடாகும். இந்த வழிபாட்டுக்கு உரிய ஒரே கருவி நினைவு.

நினைவே வழிபாடு.

நெஞ்சே ஆலயம்.

வேறு பூஜை, புனஸ்காரங்கள் இல்லை.

அன்னை வழிபாட்டில் சடங்குகளுக்கு இடம் இல்லை.

ஒரு சாதாரண மனிதனின் புலம்பல் இது: ''நான் பெரும்பாலோரைப் போல ஓர் எளிய மனிதன். என் வாழ்க்கை ஒரே போராட்டமாக அமைந்து உள்ளது. யோகத்தை மேற்கொள்ளலாம் என்றால், யோக வாழ்க்கை சோதனைகள் நிறைந்தது. ஒரு நாள் போவது ஒரு யுகமாக இருக்கிறது. குடும்ப வாழ்க்கையே எனக்கு யோகமாகப்படுகிறது. என்னைச் சுற்றி இருப்பவர்கள் எதற்கும் அஞ்சாது பொய் சொல்கின்றார்கள். 'மற்றவர்களை மோசம் செய்யத் தயங்கமாட்டேன்' என்கிறார்கள். அவர்களைப் போலவே என்னாலும் பொய் பேசாமலும், மோசம் செய்யாமலும் இருக்க முடியவில்லை.



ஜோதிடர், 'நேரம் சரி இல்லை. நல்ல நேரம் இன்னும் வரவில்லை' என்கின்றார். நிகழ்ச்சிகள் விரைந்து செல்கின்றன. நான் முயற்சி எடுப்பதற்குள் அந்த விஷயம் முடிந்துவிடுகின்றது.

பிரார்த்தனை செய்ய என் மனம் தயாராகும்பொழுது விஷயங்கள் வேகமாக என்னைக் கடந்து சென்றுவிடுகின்றன. ஸ்ரீ அரவிந்தரோ அவதாரப் புருஷர்; அன்னையோ பராசக்தி; அவர்கள் வாழ்வில் நடந்தவை எல்லாம் என் போன்ற சாமானியனுக்கு எப்படிப் பொருந்தும்? அன்னையின் கருணா கடாட்சத்தை நான் எப்படிப் பெற முடியும்? என் போன்ற சாமானியருக்கு அன்னை எப்படித் தம் தெய்வாம்சத்தை உணர்த்துகின்றார்? நான் மரக் கட்டையைப் போல ஜடமாக இருக்கின்றேன். என் மீது அன்னையின் பார்வை எப்படி விழும் என்பதைச் சற்று விளக்கினால் தேவலை''.

"அன்னையை நினைத்த பிறகு நீ சாமானிய மனிதன் இல்லை. நீ அன்னையின் ஒளியை உன்னில் சுமந்து நிற்கின்றாய். ஒளியை உள்வாங்கிக் கொண்டு இருக்கின்ற உனக்கு நெகிழ்ந்த பக்தி ஏற்படும்பொழுது ஸ்ரீ அரவிந்தர் சூட்சும உலகில் காட்சி தர, சுவரில் தோன்றுகின்றார். தூய்மையான மனத்துடன் சமாதிக்குத் தியானம் செய்யச் சென்றால், ஒவ்வொரு மலரிலும் அன்னை காட்சி அளிக்கின்றார். உனக்குத் தேவையானவற்றை நீ கேட்காமலேயே அன்னை கொடுக்கின்றார். உனக்குத் கேட்கத் தெரியாதவற்றையும் அன்னை கருணையோடு வழங்குகின்றார். ஒன்றேகால் இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள காப்பித் தோட்டத்தை, அன்னை ரூபாய் மூன்று இலட்சத்திற்கு விலை போகச் செய்கின்றார். உன்னுடைய காரியங்கள் கெட்டுப்போன பிறகே உனக்குத் தெரியும்பொழுது, அந்த நிலையிலும்கூட நீ அன்னையின் மீது முழு நம்பிக்கை கொள்வதால், முன்கூட்டியே அந்தக் காரியத்தை நல்ல விதமாகப் பூர்த்தி செய்ய வேண்டிய சூழ்நிலையை அவர் தோற்றுவிக்கின்றார். போராட்டம் நிறைந்த உன் அவல வாழ்க்கையை ஒளிமயமான பாதையில் திருப்பிச் செலுத்துகின்றார். 'நேரம் வரவில்லை' என்று ஜோதிடர் உன்

நம்பிக்கைக் கதவை அடைத்துச் சாத்திய நிலையில், 'நேரம் வந்துவிட்டது' என்று கூறுமாப்போலே நிலவரத்தைத் தலைகீழாக மாற்றி, உனக்குச் சாதகக் கதவைத் திறந்துவிட்டு, உன் வாழ்க்கையில் ஒளி ஏற்றுகிறார். இராகு காலத்தையும், எமகண்டத்தையும் உனக்குச் சேவை செய்ய, அன்னை அவற்றுக்கு உத்தரவிடுகின்றார். நீ எதிர்நோக்கி இருக்கும் சோதனைகளை, சாதனைகளின் வெற்றி வாய்ப்பாக மாற்றி அருள்கின்றார். யோகத்திற்கும், இறைவனை அடைவதற்கும் சோதனை தேவை இல்லை எனப் புதிய மார்க்கத்தைக் காட்டுகின்றார். உயிரை மாய்த்துக் கொள்வதென்று முடிவுக்கு நீ தள்ளப்பட்ட நிலையில், உன்னைக் காப்பாற்றுவதற்காக வலிய வந்து அருள்பாலிக்கின்றார்.

அன்பனே, அன்னை உன்னைத் தேடி வருகின்றார். அவரை நீ பூரணமாக ஏற்றுக்கொள். அவரது அருளொளியில் திளைத்து, அன்பெனும் பிடிக்குள் அடங்கி, வாழ்வை ஒளிமயமாக மாற்றிக்கொள். வாழ்வு வருகின்றது, பெற்றுக் கொள்; வளம் வருகின்றது, வாங்கிக்கொள்".

இதுதான் நான் அந்தச் சாமானியனுக்கு அளிக்கும் சாரமான பதில்.

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

***அர்த்தமற்ற சிறிய நல்லதையும் அனைவரும் பெற முடியாது.***
***நேரம் வந்தால் சிறியது பெரியதாகும்.***
***சிறியது, தெய்வத்திற்குப் பெரியது.***
***சிறியதை நேரம் பெரியதாக்கும்.***





# பத்துக் கடை பாலு

சமர்ப்பணன்

ராஜா அண்ணாமலைபுரத்திலிருந்த அந்த பிரம்மாண்டமான பங்களாவிற்குள் நான் நுழைந்தபோது, சாம்பல் நிற சீருடை அணிந்திருந்த காவல்காரர்கள் என்னைத் தடுத்து நிறுத்தவில்லை. புன்னகையோடு வணக்கம் கூறி காம்பவுண்டு கேட்டைத் திறந்து விட்டார்கள். நான் அடிக்கடி அங்குச் சென்று வருபவன். அந்த பங்களா உரிமையாளரின் ஒரே செல்ல மகன் சரவணனின் ஒரே நல்ல நண்பன். பிறருக்கு உள்ள கட்டுப்பாடுகள் எனக்கு இல்லை.

சுற்றுச்சுவரைக் கடந்து ஒரு நிமிடம் வேகமாக நடந்தபின் பங்களாவை அடைந்தேன். வராண்டாவில் நின்று கொண்டிருந்த இரண்டு டாபர்மென் நாய்களுக்கு பெரிய, பெரிய தட்டுக்களில் உணவிட்டுக் கொண்டிருந்த வயதான சமையல்காரரான சுப்பையா, "வாங்க சந்துரு தம்பி, வாங்க. சின்னய்யா முதல் மாடியில் தூங்கிக் கொண்டிருக்கிறார், போய் எழுப்புங்கள்" என்றார்.

''புதன்கிழமை காலை ஒன்பதரை மணிக்குத் தூங்கிக் கொண்டிருக்கிறாரா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். நான் பொதுவாக மாலை வேளைகளில்தான் சரவணனின் வீட்டிற்குச் செல்வது வழக்கம்.

"அவர் எப்போதுமே பத்து மணிக்குத்தான் எழுந்திருப்பார். பதினோரு மணிக்குக் காரில் ஏறி ஒவ்வொரு கடையிலும் ஐந்து நிமிஷம் தலையைக் காட்டிவிட்டு, ஒரு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவார். மத்தியானம் நண்பர்கள் வருவார்கள். சாயந்திரம் அவர்களோடு எங்காவது வெளியே போய்விட்டு பத்து மணிக்கு வந்துவிடுவார். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா என்ன!" என்று கேட்டார் சுப்பையா.

“தெரியாது அண்ணே. நான் பொதுவாக என்றாவது சாயந்திரம் ஆறு மணிக்கு வந்துவிட்டு ஏழு மணி வரை இலக்கியம் பற்றி பேசிவிட்டுப் போய்விடுகிறேன். வியாபாரம் பற்றியோ மற்ற விவகாரங்கள் பற்றியோ பேசுவதில்லை” என்றேன்.

“நண்பன் என்றால் உரிமையோடு எல்லாவற்றையும் தட்டிக் கேட்க வேண்டும் சந்துரு தம்பி. அம்மாவும், அய்யாவும் சரவணனைப் பற்றி கவலைப்படாத நேரமே இல்லை” என்றார் சுப்பையா.

“அவர்கள் இல்லையா?” என்று கேட்டேன்.

“அய்யா தினமும் காலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து, தயாராகி, பூஜை செய்துவிட்டு, ஐந்து மணிக்கு கடைக்குப் போய்விடுவார். ஒரு கடையில் முக்கால் மணி நேரம் இருப்பார். பத்துக் கடைகளையும் பார்த்துவிட்டு ஒரு மணிக்கு வீட்டுக்குச் சாப்பிட வருவார். மதியம் இரண்டு மணிக்குக் கிளம்பி மறுபடியும் ஒவ்வொரு கடையாகப் போய் கவனித்துவிட்டு இரவு பத்து மணிக்கு வருவார். முப்பது வருஷங்களாக ஒரு நாள் தவறாமல் இப்படித்தான் உழைக்கிறார். சில சமயங்களில் அம்மாவும் அய்யாவோடு கடைகளுக்கு இன்று போனதுபோல போவதுண்டு” என்றார் சுப்பையா. கடை என்று சுப்பையா குறிப்பிட்டது பெட்டிக் கடையையோ, பலசரக்குக் கடையையோ அல்ல. ஒவ்வொன்றும் மிகப்பெரிய வியாபார நிறுவனம்.

“அவ்வளவு நேரமா அய்யா வேலை பார்க்கிறார்? வயது என்ன இருக்கும்?” என்று கேட்டேன்.

“வருகிற கார்த்திகையில் எழுபது நிறைந்துவிடும். இருபது வயதுப் பையன் போல வேலை பார்க்கிறார். நம் குலக்கொழுந்துக்கு இருபதிலேயே இருநூறு வயதானது போல தள்ளாமை வந்துவிட்டது. உங்களைப் போலக் கூட்டாளிகள்தான் எடுத்துச் சொல்லி திருத்த வேண்டும்” என்றார் சுப்பையா.

நான் மௌனமாக இருந்தேன்.

“சந்துரு தம்பி, இருநூறு கோடி ரூபாய் சொத்துக்கு ஒரே



வாரிசாக இருந்து கொண்டு ஒன்றுமே செய்யாமல் பணத்தை அனுபவித்துக் கொண்டிருப்பது சரிவருமா? அருப்புக்கோட்டை-யிலிருந்து உடுத்திய ஒரே கிழிந்த வேட்டியோடு சென்னைக்கு வந்தவர் அய்யா. இத்தனைச் சொத்தும் அவருடைய உழைப்பால் வந்தது. அவர் பையன் இப்படி இருக்கலாமா?” என்றார் சுப்பையா.

“அப்பா கடுமையாக உழைத்துச் சம்பாதிப்பார், பிள்ளை தண்டமாக இருந்து செலவழிப்பார் என்பது உலகம் முழுவதும் இருப்பதுதானே. நீங்கள் சொன்னது போல் உழைப்பால் பணம் வரும்தான். ஆனால் இவ்வளவு பணம் வர வேண்டுமென்றால், உழைப்பு மட்டுமே போதாது” என்றேன்.

“சத்தியவாக்கு! இந்த நாற்காலியில் உட்காருங்கள் தம்பி, அய்யாவோட கதையைச் சொல்கிறேன். நான் கூடவே இருந்து அவர் வளர்ச்சியை பார்த்தவனாச்சே” என்றார்.

நான் நாற்காலியில் உட்கார, சுப்பையா வராண்டா படியொன்றில் உட்கார்ந்து கொண்டார். நாய்கள் சாப்பிட்டு முடித்துவிட்டன. இரவு முழுவதும் கண் விழித்திருந்த நாய்கள் ‘ஏனப்பா, நீங்கள் இரண்டு பேரும் தொணதொணவென்று பேசி எங்கள் தூக்கத்தைக் கெடுக்கிறீர்கள்?’ என்பது போல எங்களை அரைக்கண்ணால் பார்த்துவிட்டு வராண்டா ஓரத்தில் சாய்ந்து தூங்க ஆரம்பித்தன.

“ஐம்பது வருடங்களுக்கு முன்னால் நான் சின்னப் பையன். மாம்பலத்தில் முருகன் மளிகைக் கடையில் எடுபிடி ஆளாக வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் காலையில் அய்யா அங்கு வந்து கடை முதலாளியைப் பார்த்தார். அப்போது அவர் பெயர் பாலு, அய்யா இல்லை. அய்யாவுக்குப் பதினெட்டு, இருபது வயதிருக்கும். பார்ப்பதற்கு பதினைந்து வயது பையன் போலத்தான் இருப்பார். மூன்று நாளைக்கு ஒரே ஒரு வேளை சாப்பிட்டால் வளர்ச்சி எப்படி வரும்? மெலிந்த உடலும் கிழிந்த வேட்டியுமாகப் பார்க்க பரிதாபமாக இருந்தார். முதலாளி மூன்று கேள்விகள் கேட்டார். என்ன ஜாதி? எந்த ஊர்?

ஊரில் உன் சம்பளத்தை நம்பி வாழும் குடும்பம் உண்டா? அய்யாவின் பதில்களைக் கேட்ட முதலாளிக்குப் பூரண திருப்தி. உடனே சாப்பாடு போட்டார். இரண்டு புதிய வேட்டிகளும், சட்டைகளும் வாங்கித் தந்தார். கொஞ்சம் பணம் தந்து உடனே ஊருக்கு அனுப்பி வைக்கச் சொன்னார். கடையிலேயே தங்கிக் கொள்ளச் சொன்னார். அய்யாவால் பேசவே முடியவில்லை. 'முதலாளி, முதலாளி' என்று சந்தோஷத்தில் தத்தளிக்கிறாரே தவிர வேறு வார்த்தை அவர் வாயில் வரவே இல்லை'' என்றார் சுப்பையா.

''முதலாளி கெட்டிக்காரர்தான்'' என்றேன்.

''அதிலென்ன சந்தேகம்! அன்றிலிருந்து உழைக்க ஆரம்பித்த அய்யா இன்று வரை நிறுத்தவில்லை. தொழிலை ரொம்பவும் கவனமாகக் கற்றுக் கொண்டார். முதலாளியின் கடையை ஏதோ தன் சொந்தக் கடை போல நினைத்து வேலை பார்த்தார். அதுவரையிலும் வரவுக்கும், செலவுக்கும் சரியாக ஓடிக் கொண்டிருந்த கடை ஒரு வருஷத்திற்குள் பிரமாதமாக வளர்ந்துவிட்டது. சைக்கிளில் வந்து போய்க் கொண்டிருந்த முதலாளி, 'கார் வாங்கலாமா?' என்று யோசிக்க ஆரம்பித்துவிட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். முருகன் மளிகைக் கடையின் வளர்ச்சிக்கு அய்யாதான் காரணம். அவர் உழைப்பு மட்டும்தான் காரணம்'' என்றார் சுப்பையா.

''முதலாளி கார் வாங்கினாரா, இல்லையா?'' என்று கேட்டேன்.

''கார் வாங்கினார். ஒரே வருஷத்தில் வாங்கிய காரை கடையோடு விற்கும் நிலைக்கும் வந்து சேர்ந்தார். ஊர் விட்டு ஊர் வந்து தொழில் செய்யும் போது, பணம் வெள்ளமாகக் கையில் புரண்டு ஓடினால் என்னென்ன பழக்கவழக்கங்கள் வருமோ அத்தனையும் முதலாளிக்கு வந்துவிட்டது. அய்யா வந்து சேர்ந்து இரண்டாவது வருஷம் முடிவதற்குள் முதலாளி திவாலாகும் நிலைக்கு வந்துவிட்டார்'' என்றார் சுப்பையா.

''என்னதான் ஆண்டவன் மேலிருந்து அருளை மனிதன் தலை மேல் கொட்டினாலும் அவன் ஓட்டையாக இருந்தால் நயா பைசா



நிற்காதே!'' என்றேன்.

''வாஸ்தவம்தான். கடன்காரர்களின் தொந்தரவு தாங்க முடியாமல் முதலாளி ஒரு நாள் எல்லோரையும் கூப்பிட்டனுப்பினார். 'என் போதாத காலம், என்னென்னவோ நடந்துவிட்டது. இப்போது இந்தக் காரும், கடையும், இதிலிருக்கும் சரக்குகள் மட்டும்தான் என் சொத்து. இதை நீங்கள் எல்லோரும் பிரித்துக் கொள்ளுங்கள். நான் சொந்த ஊருக்குத் திரும்பிப் போய், கோவில் பிரசாதம் சாப்பிட்டு என் எஞ்சிய காலத்தை ஓட்டப்போகிறேன்' என்றார். 'கடையைப் பிரித்தால் கொடுத்த கடனில் மூன்றில் ஒரு பங்குகூட தேறாதே' என்று எல்லா கடன்காரர்களுக்கும் ஒரே கோபம். வாய்க்கு வந்தபடி பேசினார்கள். முதலாளி ஒன்றுமே பேசாமல் சும்மா இருந்தார். அப்போதுதான் ஒரு நாளைக்கு நாலைந்து வார்த்தைகள் மட்டுமே பேசும் அய்யா முதலாளியைப் பார்த்து ஒரு யோசனை சொன்னார்'' என்றார் சுப்பையா.

''என்ன யோசனை?'' என்று கேட்டேன்.

''முதலாளியிடம் அய்யா, 'கடை நன்றாக நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். கடன்காரர்கள் ஒப்புக்கொண்டால் உங்கள் கடன் மொத்தத்திற்கும் நான் பொறுப்பெடுத்துக் கொள்கிறேன். நான் கடையை நடத்துகிறேன். உங்கள் செலவுக்கு மாதம் ஒரு தொகையை அனுப்பி வைக்கிறேன். நீங்கள் நிம்மதியாக ஊருக்குப் போங்கள்' என்றார். அய்யாவைப் பற்றி எல்லோருக்கும் தெரியும் என்பதால் உடனே அந்த யோசனையை மறுபேச்சில்லாமல் ஒப்புக் கொண்டார்கள். முதலாளி கடனிலிருந்து விடுபட்டார். அய்யா கடனாளியானார்'' என்றார் சுப்பையா.

''அய்யா ஏன் அப்படிச் செய்தாராம்?'' என்று கேட்டேன்.

''ஒரு வாய் சோற்றுக்கு வழியில்லாமல் வாசலில் வந்து நின்றபோது தனக்கு மட்டுமல்லாமல் தன் குடும்பத்திற்கும் சோறு போட்டவருக்கு, தனக்குத் தொழில் சொல்லித் தந்த குருவிற்கு நன்றி காட்டும் விதமாக அப்படிச் செய்தார். முதலாளி கல்லாப்

பெட்டியிலிருந்த எல்லாப் பணத்தையும் எடுத்துக் கொண்டு, வெறும் பெட்டியைப் பூட்டி, சாவியை அய்யாவிடம் கொடுத்தார். 'கொடுத்த வாக்கைக் காப்பாற்று, மாதாமாதம் ஏதாவது பணம் அனுப்பு' என்று கூறிவிட்டுக் காரில் ஊருக்குக் கிளம்பிப் போனார்" என்றார் சுப்பையா.

"தங்கமான முதலாளி" என்றேன்.

சிரித்தார் சுப்பையா. "அன்றிலிருந்துதான் பாலுவாக இருந்தவர், எங்களுக்கெல்லாம் அய்யாவாகிவிட்டார். லாபமாக வந்த ஒவ்வொரு ரூபாயையும் கடனுக்குத் திருப்பிக் கட்டினார். இரண்டே வருஷத்தில் எல்லாக் கடன்களையும் திருப்பிக் கட்டிவிட்டார். தனக்கென்று ஒரே ஒரு ரூபாய் கூட ஒதுக்கிக் கொள்ளவில்லை. பண்டிகை வந்தால் கடையில் வேலை பார்த்தவர்களுக்குத் துணிமணி எடுத்துத் தருவார். ஊருக்குப் போக, வர தாராளமாக பணம் தருவார். ஆனால், கடனைத் திருப்பிக் கட்டும் வரை தனக்கு ஒரு புது வேட்டி கூட எடுத்துக் கொள்ளவில்லை. புதிதாக கடைக்கு வருபவர்களுக்கு எங்களைப் பார்த்தால் முதலாளி போலவும் அவரைப் பார்த்தால் வேலைக்காரர் போலவும் தோன்றும்" என்றார் சுப்பையா.

"கடன் கட்டி முடித்த பின்பு அய்யா என்ன செய்தார்?" என்று கேட்டேன்.

"அய்யா ஒன்றும் செய்யவில்லை. பழைய முதலாளிதான் விஷமம் செய்தார். எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்தபின் ஒரு நாள் ஊரிலிருந்து கிளம்பி மிடுக்காகக் கடைக்கு வந்தார். 'பாலு, கடை எப்படி நடக்கிறது?' என்று விசாரித்தார். அய்யா ரொம்பப் பணிவாக அவரை வரவேற்று உபசரித்தார். 'உன்னைப் பற்றிப் பிரமாதமாக நினைத்து உன்னிடம் கடையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு ஊருக்குப் போனேன். பல வருஷங்களாகியும் கடை அப்படியேதான் இருக்கிறது. ஒரு முன்னேற்றமும் இல்லையே!' என்று கூசாமல் சொன்னார். 'முயற்சி பண்ணிக் கொண்டே இருக்கிறேன் முதலாளி' என்றார் அய்யா. 'நீ பார்த்தது போதுமப்பா, இனிமேல் நானே பார்த்துக் கொள்கிறேன்' என்று நைச்சியமாகச் சொன்னார் முதலாளி. அந்த



அநியாயத்தைப் பார்த்து கடைத்தெருவே கலகலத்துவிட்டது. 'உனக்கு மூன்று நாட்கள் தருகிறேன். அதற்குள் எல்லாக் கணக்கையும் எழுதி, நல்ல நேரம் பார்த்துக் கடையை ஒப்படைத்துவிடு' என்று கூறிவிட்டுக் கிளம்ப யத்தனித்தார் முதலாளி" என்றார் சுப்பையா.

"பணத்திற்காக மனிதன் எதை வேண்டுமானாலும் பேசுவான்" என்றேன்.

"அப்போது அய்யா அதிசயமான காரியம் செய்தார். 'முதலாளி, நீங்கள் வந்ததால் நேரம் நல்ல நேரமாகிவிட்டது. இப்பொழுதே கடையை அப்படியே எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறி, பணத்தால் நிரம்பி வழியும் கல்லாப்பெட்டிச் சாவியை முதலாளியிடம் நீட்டினார். நான் அதைத் தடுத்தேன். 'அய்யா, அவசரப்படாதீர்கள். பழைய முதலாளி கேட்டது தர்மப்படியும், சட்டப்படியும் தப்பு. கடை உங்களுடையது. நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள். அநியாயம் செய்யும் இவரை அடித்து விரட்டி விடுகிறேன்' என்றேன். 'அப்படியெல்லாம் பேசாதே. எனக்கு நடப்பது அத்தனையும் நியாயமானதே. என்னிடம் எத்தனை உரிமையோடு முதலாளி கடையைத் திருப்பித் தரச் சொல்கிறார்! என்னைத் தவிர வேறு யாரிடம் அவரால் இப்படிக் கேட்க முடியும்? அவர் எனக்குச் செய்திருப்பதற்குப் பிரதியுபகாரமாக எதை வேண்டுமானாலும் செய்யலாம். முதலாளி தான் ஆரம்பித்த கடையைத்தான் கேட்கிறார், உயிரையா கேட்டார்? அதைத் தருவதில் எனக்குப் பூரண சம்மதம், பூரண சந்தோஷம்' என்று கூறி சாவியைக் கொடுத்துவிட்டு, கடையை விட்டு வெளியே வந்தார். நானும் அவர் கூடவே வெளியே வந்துவிட்டேன்" என்றார் சுப்பையா.

"அந்தக் கடையிலேயே மேற்கொண்டு ஏன் அய்யா வேலை பார்க்கவில்லை?" என்று கேட்டேன்.

"இதே கேள்வியை அப்போதே நான் அய்யாவிடம் கேட்டேன். 'என்னதான் நான் கடையைச் சந்தோஷமாகத் தந்திருந்தாலும், இவன் ஏன் இப்படி விட்டுக்கொடுத்தான் என்று முதலாளிக்குச்

சந்தேகம் இருந்து கொண்டே இருக்கும். அவரால் நிம்மதியாக இருக்கவே முடியாது. நான் வெளியே போகிறேன் என்றதும் அவர் முகத்தில்தான் எவ்வளவு சந்தோஷம்! எனக்காகக் குரல் கொடுத்த நீயும் வெளியே போகிறேன் என்றதும் அவருக்கு இரட்டிப்புச் சந்தோஷம் வந்துவிட்டதே!'. பெறுபவன் சந்தோஷப்பட வேண்டுமே என்று கொடுப்பவன் கவலைப்படும் காட்சியை அன்றுதான் முதல் முறையாகப் பார்த்தேன்'' என்றார் சுப்பையா.

''அதை வேறு வகையாகவும் பார்க்கலாம். துரோகம் செய்தவர்களுடைய தொடர்பை விலக்கிக் கொள்வது நல்லது'' என்றேன்.

"அய்யா ஒருபோதும் எவரையும் துரோகி என்று நினைத்ததே இல்லை. துரோக புத்தி இருப்பவனுக்குத்தான் விசுவாசி, துரோகி என்ற பேதமெல்லாம் இருக்கும்" என்றார் சுப்பையா.

"சரி, சரி, நானும் யாரையும் துரோகியாக நினைக்கவில்லை'' என்றேன்.

''அய்யா சந்தோஷமாக இருந்தார். அவர் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து நானும் சந்தோஷமாக இருந்தேன். அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் நடைபாதையில் நின்று கொண்டிருந்தோம். அப்போது முருகன் மளிகைக் கடைக்கு எதிர்சாரியில் துணிக்கடை வைத்திருந்த செட்டியார், அய்யாவைத் தன் கடைக்குள் கூப்பிட்டார். 'தம்பி, நீ வந்தது முதல் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் தியாகராய நகரில் ஒரு பெரிய துணிக்கடை ஆரம்பிக்கப் போகிறேன். நீ அந்தக் கடையில் கூட்டாளியாக சேர்ந்து கொள், பாதி பங்கு தருகிறேன். மாதச் சம்பளமும் எடுத்துக் கொள். வக்கீல், ஆடிட்டரையெல்லாம் கலந்து பேசி, முறைப்படி எல்லாவற்றையும் எழுதிச் செய்யலாம்' என்றார். அய்யா, 'நான் பலசரக்குக் கடை நடத்தியவன், துணிக்கடை என்கிறீர்களே' என்றார். 'நிர்வாகத் திறன் இருந்தால் எந்தத் தொழிலையும் செய்யலாம். தொழில் விவரங்களைத் தெரிந்து கொள்ள



எத்தனை நாளாகப் போகிறது?' என்று உற்சாகப்படுத்தினார் செட்டியார். அப்புறம் புதிய துணிக்கடைப் பெரிய அளவில் வளர்ந்துவிட்டது. செட்டியாருக்கு வாரிசில்லை. கடைசி காலத்தில் ஒரு பெரிய தொகையை வாங்கிக் கொண்டு இரண்டு கடைகளையும் அய்யாவிடமே தந்துவிட்டார். அதற்கடுத்த எட்டு வருஷங்களில் அய்யா வருஷத்திற்கு ஒரு புதிய கடை என்று எட்டுக் கடைகளை ஆரம்பித்து, 'பத்துக் கடை பாலு' ஆகிவிட்டார். வருமான வரி கணக்குப்படி இருநூறு கோடி சொத்து இருக்கிறது. உண்மையான மதிப்பு அதைவிடப் பல மடங்கு கூடத்தான் இருக்கும்'' என்றார் சுப்பையா.

நான் பிரமித்து உட்கார்ந்திருந்தேன். சிறிது நேரம் கழித்து, "அய்யா என்ன படித்திருக்கிறார்?'' என்று கேட்டேன்.

''ஆறாவது வரை படித்திருக்கிறார். அதற்கப்புறம் வாழ்க்கைதான் அவருக்குப் பள்ளிக்கூடமாகிவிட்டது" என்ற சுப்பையா தொடர்ந்து சொன்னார். "அய்யா எனக்குக் கல்யாணம் பண்ணி வைத்து, மகனைப் படிக்க வைத்து, வீடெல்லாம் வாங்கித் தந்திருக்கிறார். பிள்ளை அமெரிக்காவில் வேலை பார்க்கிறான். அவன் அம்மாவும் அங்கேதான் இருக்கிறாள். நான்தான் அய்யாவை விட்டுப் போக மனமில்லாமல் இங்கேயே தங்கிவிட்டேன்''.

மெல்ல எழுந்த முதல் நாய் எங்கள் இருவரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டது.

அப்போது மாடியிலிருந்து சரவணன் கொட்டாவி விட்டுக் கொண்டே இறங்கி வந்தான். "வாப்பா சந்துரு, புரூஸ்லீ நடித்த படம் ஒன்று புதிதாக வந்திருக்கிறதாம். காலைக் காட்சிக்குப் போகலாமா?'' என்று கேட்டான்.

"நீ கடைகளுக்குப் போய் வியாபாரத்தைப் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்டேன்.

''அதெல்லாம் அய்யா பார்த்துக் கொள்வார்'' என்றான் சரவணன்.

*முற்றும்.*

❋❋❋

## Sri Aurobindo and the Tradition

## ஸ்ரீ அரவிந்தரும், மரபும்

*(ஜூலை 2012 இதழின் தொடர்ச்சி...)*

கர்மயோகி

16. Tradition knows the planes of Time and Timelessness.
**Sri Aurobindo has discovered one more plane of Time where they both coexist.**
மரபு காலத்தையும், காலமின்மையையும் அறியும்.
**காலமும், காலமின்மையும் சேர்ந்துறையும் தளத்தை ஸ்ரீ அரவிந்தர் கண்டறிந்தார்.**

17. Tradition reaches the Overmental knowledge which coexists with ignorance.
**Sri Aurobindo reaches the Supramental knowledge where there is no ignorance.**
அஞ்ஞானத்தோடு சேர்ந்துறையும் தெய்வலோக ஞானத்தை மரபு அடைகிறது.
**அஞ்ஞானமே இல்லாத சத்தியஜீவிய ஞானத்தை ஸ்ரீ அரவிந்தர் அடைகிறார்.**

18. To the tradition, Sachchidananda is the final realisation.
**Sri Aurobindo says there is a further stage when Sachchidananda expresses in its opposite.**
மரபிற்கு சச்சிதானந்தமே இறுதியான அறிதல்.
**சச்சிதானந்தம் தனக்கு எதிரானதை வெளிப்படுத்தும் அடுத்த கட்டம் உண்டு என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.**

19. Being, Consciousness, Ananda are separate entities to the tradition.
**To Sri Aurobindo, Being is Consciousness, Consciousness is Ananda.**
மரபிற்குச் சத், சித், ஆனந்தம் ஆகியவை தனித்தனியான இருப்புகள்.
**ஸ்ரீ அரவிந்தருக்கு சத்தே சித், சித்தே ஆனந்தம்.**

20. Tradition sees the existence of knowledge as well as ignorance.
**To Him, Ignorance is a modification of knowledge.**
ஞானமும், அஞ்ஞானமும் இருப்பதை மரபு காண்கிறது.
**ஸ்ரீ அரவிந்தரைப் பொறுத்தவரை அஞ்ஞானம் என்பது மாறுதலுக்கு உட்படுத்தப்பட்ட ஞானமே.**

21. Spirituality is for the Rishi, religion is for the masses, lays down the tradition.
**Spirituality is for all, says He. Religion is the masses following one's enlightenment. Spirituality is enlightenment to everyone.**
ஆன்மீகம் ரிஷிகளுக்கும், மதம் பிற அனைவருக்கும் உரியது என்று மரபு விதிக்கிறது.
**ஆன்மீகம் அனைவருக்கும் உரியது என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். ஒருவரின் அகஒளியை அனைவரும் பின்பற்றுவதே மதம், அனைவருக்கும் அகஒளியூட்டுவது ஆன்மீகம் என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.**

22. Spirit is to be liberated from all other parts of the Being is the tradition.
**All parts of the Being should evolve the inner Spirit, says Sri Aurobindo.**
ஜீவனின் பிற அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆன்மா விடுவிக்கப்பட வேண்டுமென மரபு கூறுகிறது.

**ஜீவனின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ளுறை ஆன்மாவை பரிணமிக்க வைக்க வேண்டும் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.**

23. Yoga is yoga of liberation for the tradition.
**His yoga is called the yoga of spiritual evolution.**
மரபைப் பொறுத்தவரை யோகம் என்பது மோட்சத்திற்கான யோகமே.
**ஸ்ரீ அரவிந்தரின் யோகம், ஆன்மாவைப் பரிணாமம் அடைய வைக்கும் யோகம் என்று அழைக்கப்படுகிறது.**

24. One without a second, All is Brahman are the findings of the tradition.
**Sri Aurobindo reconciles them both in the Omnipresent Reality.**
மற்றது இல்லாத ஒன்று, அனைத்தும் பிரம்மமே என்பது மரபு.
**எங்குமிருக்கும் சத்தியத்தில் அவை இரண்டையும் ஸ்ரீ அரவிந்தர் பொருத்துகிறார்.**

25. Tradition says God created the world.
**Sri Aurobindo says God became the world.**
கடவுள் உலகைப் படைத்தார் என்கிறது மரபு.
**ஸ்ரீ அரவிந்தர் கடவுளே உலகமானார் என்கிறார்.**

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***பெண் சமூகத்தைவிடப் பெரியவள்.***
***சமூகத்தை மாற்றும் சக்தி அவளுடையது.***



# Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 1)

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

முன்னணியில் இருக்கின்ற டாக்டர்கள், வழக்கறிஞர்கள், ஆடிட்டர்கள், corporate CEOக்கள் என்று இவர்கள் எல்லோரும் உடல் உழைப்புக்குப் பதிலாக அறிவைப் பயன்படுத்தி சம்பாதிக்கின்றவர்கள். இவர்களுடைய மாத வருமானத்தை எடுத்துக் கொண்டால்கூட குறைந்தபட்சம் சில இலட்சங்கள் இருக்கும், அதிகபட்சமாக வருடாந்திர வருமானம் ஒரு கோடியாகக் கூட இருக்கும். வெறும் உடல் உழைப்பால் கிடைக்கின்ற மாத வருமானமான ரூ.6,500 அல்லது ரூ.7,800 மற்றும் வருட வருமானமான ரூ.78,000 அல்லது ரூ.93,600உடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சில இலட்சங்களும், ஒரு கோடியும் பிரமிப்பாகத்தான் இருக்கிறது.

இப்படிப்பட்ட வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நாம் தாண்டி வராமல் நம் வாழ்க்கையை நாம் உயர்த்திக் கொள்ள முடியாது. Physical plane வரையறைக்கு உட்பட்டது என்றாலும் vital plane மற்றும் mental plane ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டு ஒத்துழைக்கும் அளவிற்கு அதற்கும் ஒரு வரம்பற்ற தன்மை பிறக்கிறது. ஒரு மனிதன் எந்த ஈடுபாடும் அக்கறையும் இல்லாமல் வேலையை மெக்கானிக்கலாக வெறும் உடல் சக்தியை மட்டும் பயன்படுத்திச் செய்யும் பொழுது அவருக்கு விரைவில் களைப்பு வந்துவிடுகிறது. அதனால் 8 மணி நேரத்திற்கு மேலும் அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்றால் கட்டாயப்படுத்தித் தான் அந்த வேலையை வாங்க முடியும். ஆனால் அதே உடல் வேலையை ஒரு ஈடுபாட்டுடன் செய்யும் பொழுது அவருடைய உணர்வு மையத்தினுடைய ஈடுபாடு அந்த வேலையில் சேர்ந்து கொள்கிறது. அதனால் அவருடைய வழக்கமான உடல் தெம்போடு அவருடைய உணர்வு மையம் வழங்கக் கூடிய

கூடுதல் எனர்ஜியும் அவருக்குக் கிடைக்கிறது. அந்தக் கூடுதல் எனர்ஜியோடு வேலை செய்யும் பொழுது வழக்கமாக வருகின்ற களைப்பு வாராமல், நேரம், காலம் பார்க்காமல் வேலை செய்ய முடிகிறது. ஒரு கம்பெனிக்கு ஒரு பெரிய ஆர்டர் வந்துள்ளதாகவும், அதை நிறைவேற்றிக் கொடுத்தால் கம்பெனிக்குப் பெரிய வருமானம் கிடைக்கும் என்றும், ஆனால் 3 அல்லது 4 நாட்களிலேயே ஆர்டரை முடித்துக் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். ஆர்டரை நிறைவேற்றினால் பெரிய வருமானம் கிடைக்கும் என்று தெரியும் பொழுது அவர்களுக்குப் பெரிய மகிழ்ச்சி பிறக்கிறது. அந்த மகிழ்ச்சி நேரம், காலம் பார்க்காமல் வேலை செய்யக்கூடிய ஒரு உடல் தெம்பை அவர்களுக்குக் கொடுக்கிறது. அந்தத் தெம்பை வைத்துக் கொண்டு day shift மற்றும் night shift என்று மாறி, மாறி ஓய்வெடுக்காமல் தொடர்ந்து அந்த மூன்று, நான்கு நாட்கள் வேலை செய்து, அந்த ஆர்டரை அவர்களால் நிறைவேற்றிக் கொடுக்க முடிகிறது. இப்படி ஒரு பெரிய வருமானம், அதனால் கிடைக்கின்ற பெரிய மகிழ்ச்சி என்று இவைகளினுடைய support இல்லாமல் வேலையை வெறும் வேலையாகச் செய்யச் சொல்லி, ஓய்வெடுக்காமல் இந்தக் கம்பெனி ஊழியர்களை மாறி, மாறி day shift மற்றும் night shiftக்கு வரச் சொன்னால் அவர்கள் அப்படி ஆர்வமாக வேலைக்கு வருவது சந்தேகம். அவர்களுடைய உடம்பினுடைய அளவுக்குட்பட்ட physical எனர்ஜியை அளவற்ற எனர்ஜியாக மாற்றுவது அவர்களுடைய உணர்வு மையத்தில் இருந்து பிறக்கின்ற மகிழ்ச்சி வழங்கிய அளவுகடந்த vital எனர்ஜியாகும். தேர்தல் சமயங்களில் அரசியல் தலைவர்கள் நேரம், காலம் பார்க்காமல், சரியாகத் தூக்கம் இல்லாமல், சாப்பாடு இல்லாமல் மாநிலம் முழுவதும் மற்றும் அகில இந்தியா முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்ய பயணம் செய்வதைப் பார்க்கிறோம். 70 வயது கடந்த அரசியல் தலைவர்கள் கூட இப்படி ஓய்வில்லாமல் பிரச்சார வேலையில் ஈடுபடுவதும் உண்டு. 70 வயதைக் கடந்தவருக்குப்



பொதுவாக இந்த எனர்ஜி இருக்காது. ஆனால் தேர்தலில் கட்சிக்கு வெற்றி கிடைக்கும் என்ற ஆவலும் எதிர்பார்ப்பும் இருக்கும் பொழுது, அந்த முதிய வயதிற்கு உண்டான தளர்ச்சியையும் மீறிப் பிரச்சார வேலையைச் செய்யும் அளவில் அவர்களுடைய உணர்வு மையம் அவர்களுக்கு எனர்ஜியை வழங்குகிறது. இம்மாதிரியே போருக்குச் செல்கின்ற படை வீரர்கள், காடு, மலை, பாறை, பாலைவனம் என்று explorationக்குப் போகின்றவர்கள், மற்றும் international competitive gameக்கு விளையாடச் செல்கின்ற வீரர்கள், இவர்கள் எல்லாம் களைப்பே தெரியாமல் அவரவர்களுக்குண்டான பணிகளைச் செய்வதே அவர்களுடைய இயற்கையான உடல் தெம்பிற்குப் பதிலாக, அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற வேலையில் இருக்கின்ற ஈடுபாட்டிலிருந்து பிறக்கின்ற அளவுகடந்த எனர்ஜி அவர்கள் உடம்பை இயக்குவதால் தான்.

இம்மாதிரியே நம்முடைய அறிவின் ஆதிக்கத்தின் கீழ் நம்முடைய உடம்பு செயல்படும்போதும் நம் உடம்பின் ஆற்றலும் physical planeஉடைய ஆற்றலும் அளவு கடந்து பெருகுகிறது. வெறும் கைகளை மட்டும் வைத்துக் கொண்டு நாம் வேலை செய்யும் பொழுது நம்முடைய உற்பத்தித் திறன் மிகவும் குறைவு. ஆனால் machineகள் நம் அறிவால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்கள் ஆகும். Machineகளை வைத்துக்கொண்டு மனிதன் factoryஇல் வேலை செய்யும் பொழுது factory உற்பத்தி அபாரமாக அதிகரிக்கிறது. இதே ரீதியில் பார்க்கப்போனால் நம் அறிவைவிட அதிக சக்தி வாய்ந்தது நம்முடைய ஆன்மாவாகும். அப்படி என்றால் இந்த ஆன்மாவின் ஆதிக்கத்தின் கீழ் நம்முடைய உடம்பு செயல்பட முன் வந்தால் அதனுடைய உற்பத்தித் திறன் எந்த அளவிற்கு அதிகரிக்கும் என்பதை நாம் கற்பனை செய்ய வேண்டும். தன்னுடைய உடம்பு, உணர்வு, அறிவு ஆகிய மூன்றும் கொடுக்கின்ற எனர்ஜி மற்றும் ஆற்றலை வைத்துக் கொண்டு வேலை செய்கின்ற ஒருவர் மாதம் ரூபாய் 20,000 தான் சம்பாதிக்கிறார் என்றால் ஆன்மீகப்

பண்புகளான பக்தி, நம்பிக்கை மற்றும் சமர்ப்பணம் மற்றும் மௌன சக்தி என்ற இவை கொடுக்கும் பலத்தை வைத்துக் கொண்டு செயல்பட முன்வந்தார் என்றால் அதே ரூ.20,000 என்பது மாதம் ரூபாய் 2 இலட்சம் ஆகவும், ரூ.2 கோடியாகவும் கூட உயர்வதைக் காணலாம். அதாவது வெறும் உடம்பு மட்டும் வேலை செய்வதால் குறைந்தபட்சப் பலன்தான் கிடைக்கும். உணர்வும் அறிவும் கலந்து கொண்டால் சுமாரான பலன் கிடைக்கும். ஆனால் வரம்பில்லாத வளர்ச்சி மற்றும் முடிவில்லாத முன்னேற்றம் என்று இவற்றைப் பார்க்க வேண்டும் என்றால் நம் வாழ்க்கையில் ஆன்மாவைக் கொண்டு வர வேண்டும். இப்படி நம்முடைய ஆன்மாவின் ஆதிக்கத்தின் கீழ் நம்முடைய அறிவு, உணர்வு, உடம்பு என்று மூன்றும் செயல்பட முன்வந்தால் உலக மக்களுடைய வாழ்க்கைத் தரம் அதாவது living standards அடையாளம் தெரியாத அளவிற்கு உயர்ந்து போகும். அதாவது உலகத்தினுடைய ஐஸ்வரியம் அந்த அளவிற்குப் பெருகிவிடும், உயர்ந்தும்விடும்.

இப்படி நம்முடைய ஆன்மா நம் வாழ்க்கையில் செயல்பட்டு வரம்பற்ற முன்னேற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்றால் அது வெளிவருவதற்கு ஏற்றவாறு நம்முடைய அறிவு, உணர்வு மற்றும் நாம் செயல்படும் பாணி என்று இவை எல்லாவற்றையும் நாம் மாற்றி ஆக வேண்டும். நம்முடைய வழக்கமான செயல்பாடுகள் எல்லாம் நாம் finiteஆக இருப்பதால் வருகின்ற செயல்பாடுகளாகும். ஆனால் நாம் Infiniteஆக மாறினால் நம்முடைய செயல்பாடுகள் எல்லாம் நேர் எதிராக இருக்கும். இப்பொழுது finiteஇன் உடைய செயல்பாடுகளைப் பற்றி 10 கருத்துகளையும், அதற்கு நேர் எதிர்மாறான Infiniteஇன் செயல்பாடுகள் என்று ஒரு 10 கருத்துகளையும் பட்டியலிட்டு வழங்க விரும்புகிறேன். பட்டியலுக்குண்டான விளக்கங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.



# Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 2)

| | Finite | | Infinite |
|---|---|---|---|
| 1. | இதனுடைய வளர்ச்சி பெற்றுக் கொள்வதால்தான் சாத்தியமாகிறது. | 1. | பிறரிடமிருந்து பெற்றுக் கொள்ளாமல் பிறருக்குக் கொடுத்து இது வளர்கிறது. |
| 2. | சிந்தனை செய்வதால்தான் இதனுடைய அறிவு வளரும். | 2. | சிந்தனை செய்யாமல் மௌனத்தின் மூலம் இதனுடைய அறிவு வளர்கிறது. |
| 3. | Finite Initiative மூலம் சாதிக்கிறது. | 3. | ஆனால் இதற்கு நேர் எதிர்மாறாக Surrender மற்றும் சமர்ப்பணத்தின் மூலம் இது சாதிக்கிறது. |
| 4. | Finite பகுத்தறிவை வைத்துச் செயல்படக் கூடியது. | 4. | Infinite நம்பிக்கையை ஆதாரமாக வைத்துச் செயல்படுகிறது. |
| 5. | Finiteஇனுடைய கண்ணோட்டம் பகுதியானதாகும். | 5. | Infiniteனுடைய கண்ணோட்டம் முழுமையானது. |
| 6. | Finiteக்குக் கிடைக்கும் பலன்கள் காலத்திற்கு உட்பட்டவை. | 6. | Infinite செயல்படும்போது பலன் உடனடியாகக் கிடைக்கும். |
| 7. | Finiteக்குச் சிறியது, பெரியது, quantity, quality என்ற வித்தியாசங்கள் எல்லாம் உண்டு. | 7. | இதற்கு இந்த வித்தியாசங்கள் எல்லாம் கிடையாது. |
| 8. | இருப்பதைச் சேகரம் செய்து Finite வளரும். | 8. | இருப்பதைச் செலவு செய்து Infinite வளரும். |
| 9. | Finite என்பது தனக்குத் தெரிந்த மற்றும் வழக்கமான விதிமுறைகளின்படிதான் செயல்படும். | 9. | Infinite இயற்கையாக புதுமையாகச் செயல்படும். |
| 10. | Finite பிரிவினையை வலியுறுத்திச் செயல்படுகிறது. | 10. | Infinite முழுமை மற்றும் ஒற்றுமையை வலியுறுத்திச் செயல்படுகிறது. |

*தொடரும்....*

❀❀❀

## ஜீவிய மணி

தானே மாற முன்வரும் மனத்தின் தைரியம் பெரியது.

யார் மீது குறை மனதில் எழுந்தாலும் அது மனக்குறை தவிர வேறொன்றும் இல்லை.

அதிகாரத்தால் ஸ்தாபனம் நின்று நிலைபெறும். பொறுப்பும், பண்பும் ஸ்தாபனத்தை வளரச் செய்யும்.

உள்ளே போனபின் வெளியேயிருப்பது தெரியாது.

ஸ்ரீ அரவிந்தம் ஸ்ரீ அரவிந்தர் அனுபவம்.

பெருமையை அறிந்து அறிவது அடக்கம்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

*தெம்பு தெளிவு பெறும்.*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

*நிம்மதியாக இருக்க மனிதன் பிரியப்படுகிறான்.*

***இருப்பது எல்லாம் நிம்மதியாக இருக்கிறது என்பதே ஞானம்.***

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## தியான மையம்

- தோட்டத்துப் பச்சிலைக்கு மரியாதையில்லை.
- இக்கரைக்கு அக்கரைப் பச்சை.
- வேதத்தின் பெருமையை அமெரிக்கர் புகழ்ந்தால் நாம் ஏற்போம்.
- மகேஷ் யோகி அமெரிக்காவில் பிரபலமான பின்னரே இந்தியா ஏற்றுக் கொண்டது.
- நமக்கு விஷயம் முக்கியமில்லை. VIP முக்கியம். அவர் பாராட்டுவதை நாமும் பாராட்டுவோம்.
- நோய் வந்தால் டாக்டர் நினைவு வரும், அன்னை நினைவு வாராது.
- எத்தனை முறை அன்னையின் அற்புதங்களை அனுபவித்தாலும் அடுத்த முறை பழைய பழக்கமே முன் வரும். அற்புதம் நினைவு வாராது.
- **சிரமம் வந்தால் என்ன செய்யலாம் எனத் தோன்றும், சமர்ப்பணம் நினைவுக்கு வாராது.**

இதயக் கோளாறு எங்கும் பரவலாக உண்டு. அது வரக் கூடாது. வந்தால் படுவது பெரும் சிரமம். டாக்டரிடம் போய் வரத்தான் வாழ்க்கை சரியாக இருக்கும். வேறு வேலைக்கு நேரமோ தெம்போ இருக்காது.

ஒரு பெண்மணிக்கு இதயத்தில் வால்வு கோளாறு, வலி.

டாக்டரிடம் போய் வந்தபடியிருக்கும்பொழுது "ஏன் நான் டாக்டரை நம்ப வேண்டும்? தியான மையத்திற்கல்லவா போக வேண்டும்" எனத் தோன்றி, மையத்தில் தியானம் முடித்து வீடு திரும்பினார்.

கணவர், "என்ன நடந்தது? முகம் பிரகாசமாக இருக்கிறது" என்றார். அப்பொழுதுதான் நெஞ்சில் வலியில்லை என நினைவு வந்தது. **அதன்பின் வலி வரவேயில்லை.**

***ஆயிரம் முறை அளவு கடந்து அனுபவித்தாலும்***
***அன்னை அற்புதங்கள் மறந்துவிடுகின்றன.***

❀❀❀

## நாடி வரும் நலம்

நாம் பிரார்த்தனை செய்து பலிப்பது தெரியும். பிரார்த்திக்காமல் நடப்பவை பெரிய ஆச்சரியம். சில சமயம் தெரியும். பல சமயம் கண்ணில் படுவதில்லை. ஓடும் நீரோட்டம் பள்ளத்தை நோக்கிச் சென்று, பள்ளத்தை நிரப்பி, அங்கேயே தங்கிவிடும். **அருள் மனிதனைத் தேடி வருகிறது. அவன் பிரச்சனையுள்ள இடத்தை நாடுகிறது. அவன் கேட்காமல் பிரச்சனையைத் தீர்ப்பது அருளின் பாங்கு**.

எந்த வேலைக்குப் போனாலும் அங்கே உறவினர், நண்பர், தெரிந்தவர், வேண்டியவரிருப்பதை அன்பர்கள் காணும் பொழுது முன்கூட்டி அன்னை அங்கு வந்திருப்பதை உணர்கிறார்.

காரில் போய் இறங்கியவர் கட்டிடத்தின் முன் காரை நிறுத்த வெய்யிலாக இருப்பதைக் கண்டு நிழல் உள்ள இடத்தைத் தேடினார். காணோம். வெய்யிலில் நிறுத்திவிட்டு உள்ளே கூட்டத்திற்குப் போனார். கூட்டம் முடிந்து வந்தபொழுது

***நிழல் இடம் மாறி காருள்ள இடம் வந்து***
***காரை நிழலால் சூழ்வதைக் கண்டார்.***

***நம் மனத்தில் அன்னையிருப்பதைவிட***
***அன்னை மனத்தில் நாமிருப்பது அதிகம்.***

❀❀❀

Vol. II Issue 6 September 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

| | |
|---|---|
| **ESSAYS ON ACCOMPLISHMENT**<br>N.Asokan | ரூ.150/- |

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| **அன்னையின் ஆன்மீகப்பரிசு** | ரூ.100/- |
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆ : (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆ : (044)-24347191

Vol. II Issue 6 September 2012

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## செப்டம்பர் 2012